வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 24.10.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 318 | பக்கங்கள் : 16

## புலிகளால் செய்யமுடியாமல்போன விடயத்தை இளைஞர்கள் ஸ்மார்ட்போன் ஊடாக செய்தனர்!

### பாராட்டுகின்றார் சம்பிக்க ரணவக்க



கொழும்பு, ஒக். 24

“வடக்கு ஆயுதக்குழு வால்கூட (புலிகள்) செய்ய முடியாமல்போன விட யத்தை இளைஞர்கள் ‘ஸ்மார்ட்’ போன் ஊடாக செய்து காட்டினார். இதற்கு அஞ்சியே சமூக வலைத்தளங்களை கட்டுப்படுத்துவதற்கு அரசு முயற்சிக்கின்றது.” - என்று குடியரசுக் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க

11

## சு.கவுக்கு மேலும் அமைச்சுப் பதவி; பொதுஜன பெரமுன கடும் எதிர்ப்பு!

கொழும்பு, ஒக். 24

சுதந்திரக் கட்சிக்கு மேலும் அமைச்சுப் பதவிகளை வழங்கியுள்ளமைக்கு கட்சி என்ற ரீதியில் கடும் எதிர்ப்பை வெளியிடுவதாக பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகசந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மெலும் தெரிவிக்கையில்-

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

அவை அனைத்தும் பொய்யான குற்றச்சாட்டுகள் என இறுதியில் நிருபணமானது.

ஆனாலும் இவ்வாறான சூழலில் சில மாற்றங்களைக் கொண்டு வருவது சிறந்தது என்று ஜனாதிபதி நினைத்திருக்கலாம்.எவ்வாறாயினும் இது குறித்து எமக்கு சிறிய

11

# கெஹலியவிடம் இருந்து சுகாதார அமைச்சு பறிப்பு

## அது ரமேஷ் பத்திரனவின் கைகளில் ஜனாதிபதி நேற்று அதிரடி நடவடிக்கை



கொழும்பு, ஒக்ரோபர் 24

இலங்கையில் இதுவரை இல்லாத அளவுக்கு மோசமான சுகாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதால் கெஹலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். இதன்படி புதிய சுகாதார அமைச்சராக ரமேஷ் பத்திரண நியமிக்கப்பட்டுள்ளார்.

11





## மாந்தை கிழக்கு பிரதேச செயலகம் முன்பாக மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

முல்லைத்தீவு, ஒக். 24

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குற்பட்ட வன்னிவிளாங்குளம் மக்கள் நேற்று மாந்தை கிழக்கு பிரதேச செயலகம் முன்பு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது காணிகளுக்கான முதல்தர ஆவணத்தை தருமாறு கோரியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நில அபகரிப்பு செய்பவர்களுக்கு சாட்சி சொல்லும் பிரதேச செயலகம், வன இலாகா

11

## அமைச்சரவை மாற்றத்தினால் பிரச்னைகளுக்கு தீர்வு கிட்டுமா?

### சஜித் அணி கேள்வி

கொழும்பு, ஒக். 24

அமைச்சரவையில் மாற்றமொன்று இடம்பெற்றுள்ளது. இதனால் பிரச்னைகள் தீருமா? என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜ கருணா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

11

## இராணுவ தளபாட விநியோகத்தளமாக இலங்கையை பயன்படுத்த சீனா முயற்சி

### பென்டகன் அறிக்கை

நியூயோர்க், ஒக். 24

இலங்கையை இராணுவ தளபாட விநியோகத்திற்காக பயன்படுத்துவது குறித்து சீனா ஆராய்ந்துள்ளது என பென்டகன் தெரிவித்துள்ளது.

சீனா தனது உலகளாவிய இராணுவ தளங்களை விஸ்தரிக்க முயற்கின்றது என தெரிவித் துள்ள பென்டகன், சீனா தனது இராணுவதள பாட விநியோகத்திற்காக 18 நாடுகள் குறித்து கவனம் செலுத்தியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளது.

11




## பட்ஜெட்டுக்கு பின்னர் அவசர பொதுத்தேர்தல்

### பொதுஜன பெரமுன யோசனை

கொழும்பு, ஒக். 24

வரவு - செலவுத்திட்டத்தின் பின்னர் அரசாங்கம் தேர்தலொன்றுக்கான தயார்ப்படுத்தல்களில் ஈடுபட உள்ளதாக அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன்படி, அடுத்த வருடம் மார்ச் மாதமளவில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பொதுத் தேர்தலை நடத்துவது குறித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர்களிடையே கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன.

எதிர்வரும் செப்ரெம்பர் அல்லது ஒக்ரெரோபர் மாதங்களில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி

11

## தமிழ்க் குடும்பஸ்தர் ஒருவர் கொழும்பில் வெட்டி கொலை!

கொழும்பு, ஒக். 24

கொழும்பில் தமிழர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கொழும்பு, கொலன்னாவைப் பிரதேசத்தில் நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான 45 வயதுடைய சுப்பிரமணியம் தயாபரன் என்பவரே

11

## அரவிந்தகுமார், வடிவேல் சுரேஷ், பௌசி ஆகியோர் சிக்கலில்!

கொழும்பு, ஒக். 24

இராஜாங்க அமைச்சர்களான அரவிந்தகுமார், ஏ.எச்.எம். பௌஸி, பாராளுமன்ற உறுப்பினரான வடிவேல் சுரேஷ் ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானிள்ளதாக அறியமுடிகின்றது.

அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கியமைக்காக இவர்களை கட்சியின் உறுப்புரிமையை நீக்கவும் கட்சியின் செயற்குழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர்

11

## இப்படியும் நடக்கிறது

அவர்கள் மூன்று பேரும் பால்ய நண்பர்கள். ஒரு மிருகக் காட்சிசாலையில் எதிர்பாராத விதமாக சந்தித்தார்கள்.

மூன்று பேரில் ஒருவர் சொன்னார், 'நம்மில் யார் கெட்டிக்காரர்கள் என்றொரு போட்டி வைப்போமா? என்று.

மூன்று பேரும் அங்கு இருந்த ஒரு குரங்கை சிரிக்க வைப்பது என்று முடிவானது.

முதலில் ஒருவர் தனக்குத் தெரிந்த நகைச்சுவை ஒன்றை குரங்குக்கு கேட்கின்ற மாதிரி சொன்னார்.

குரங்கு கண்டுகொள்ளவே இல்லை.

அடுத்து மற்றையவர், கோமாளி போல சைகை காட்டிப் பார்த்தார். நீண்ட நேரம் அவர் முயற்சி செய்து பார்த்த போதிலும் குரங்கு கண்டு கொள்ளவே இல்லை.

அடுத்து மூன்றாமவர். குரங்குக்கு பக்கத்தில்போய், அதன் காதுகளில் ஏதோ சொன்னார், உடனே குரங்கு பயங்கரமாக சிரிக்க ஆரம்பித் தது.

மற்றைய இருவருக்கும் ஆச்சரியம். இருந்தாலும் தாங்கள் தோற்றுவிட்டதை ஏற்றுக் கொள்ள அவர்களால் முடிய வில்லை.

சரி, இந்தக் குரங்கை இனி அழவைத்துப் பார்ப்போம் என்று முடிவெடுத்தனர்.

மறுபடியும் முதலாமவர், வந்து சோகமான உருக்கமான விஷயங்களாக சொல்லிக் கொண்டிருந்தார். குரங்கு கண்டுகொள்ளவே இல்லை.

அடுத்தவர் அழத்தொடங்கினார். சிவாஜி கணேசனின் நடிப்புத் தோற்றுவிடும் அளவுக்கு அவர் அழுவதுபோல நடித்துப் பார்த்தார். அதையும் குரங்கு சட்டை பண்ணவே இல்லை.

மூன்றாமவர், வந்து மறுபடியும் குரங்கின் காதில் போய் என்னமோ சொன்னார். உடனே குரங்கு அழ ஆரம்பித்தது.

இரண்டு பேருக்கும் அதிர்ச்சியாகப் போய்விட்டது. இதையும் ஒத்துக்கொள்ள முடியவில்லை. மேலும் ஒரு போட்டி வைக்கலாம் என்று முடிவாகியது. இந்த தடவை குரங்கை ஓட வைக்க வேண்டும் என்பது போட்டி.

வழக்கம் போல முதலாம் ஆள், குரங்கைப் பார்த்து குரைத்தார் - பயமுறுத்தினார். எழுந்து ஓடு என்று கெஞ்சிப் பார்த்தார். வழக்கம் போல குரங்கு தன்பாட்டுக்கு பேசாமல் உட்கார்ந்திருந்தது.

இரண்டாமவர் வந்து வழக்கம்போல, குரங்கை பிடித்து தள்ளிவிட்டார் - வெருட்டி பார்த்தார். குரங்கு அசரவே இல்லை.

இப்போது மூன்றாமவர், குரங்கின் காதில் போய் என்னமோ சொன்னார். அதைக் கேட்டதும் உடனே குரங்கு தலைதெறிக்க ஓடி போய்விட்டது.

கடைசியாக வேறுவழியில்லாமல் இரண்டு பேரும் தமது தோல்வியை ஒப்புக்கொண்டார்கள். பின்னர், அப்படி என்னதான் குரங்கின் காதில் சொன்னாய் என்று கேட்டார்கள்.

முதலில் சொன்னேன்: 'அண்மையில் நடந்த ஹர்த்தால் பூரண வெற்றி என்று ஒரு தலைவர் அறிக்கை விட்டிருக்கிறார்' என்றேன். அது சிரித்து விட்டது. மற்றைய இரண்டு விடயங்களும் என்னவாக இருக்கும் என்பது வாசகர்களுக்கு புரிந்திருக்கும் என்று நம்புகின்றேன்.

இனி இன்றைய விடயத்திற்கு வருவோம்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை தமிழ் மக்கள் எவ்வாறு எதிர்கொள்ளவேண்டும் என்பது குறித்து 'ஈழநாடு' நீண்டகாலமாகவே வலியுறுத்தி வந்திருக்கின்றது. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் யாரும் ஐம்பது வீதமான வாக்குகளைப் பெறமாட்டார்கள் என்றே ஆருடம் தெரிவிக்கப்பட்டுவரும் நிலையில் சிறுபான்மையினர் வாக்குகளே தீர்மானிக்கும் வாக்குகளாக இருக்கும் என்பதால் அதனை கடைசி நேரத்தில் இல்லாமல் இப்போதே திட்டமிட்டு எதிர்கொள்ள தயாராக வேண்டும் என்றே 'ஈழநாடு' வலியுறுத்தி வந்திருக்கின்றது.

இந்நிலையிலேயே சில வாரங்களுக்கு முன்னர் கூடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் ஐந்து கட்சியினர் கூடி எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் தரப்பில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்று தீர்மானித்திருந்தனர். அது தொடர்பாக நேற்றுமுன்தினம் தகவல் வெளியிட்ட அந்த கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்.

'தென்னிலங்கையில் தற்போதுள்ள கருத்துக்கணிப்புகளின் பிரகாரம், ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் களமிறங்கினால் எந்தவொருவரும் முதலாம் இரண்டாம் சுற்றில்கூட 51 சதவீதமானத்துக்கு அதிகமான வாக்குகளை பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் குறைவாகவே உள்ளன. இதனால் தமிழ் மக்களின் வாக்குகள் தீர்மானிக்கும் நிலையை அடைவதற்கான சாத்தியங்களும் உள்ளன. ஆகவேதான் பொது வேட்பாளர் ஒருவரை தமிழ் கட்சிகள் இணைந்து நிறுத்துவதென தீர்மானித்துள்ளோம். இதற்கு ஜனநாயக தமிழ்த் தேசியக்கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் இடையே கொள்கையளவிலான இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. அதேநேரம், இலங்கை தமிழரசுக்கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகியவற்றுடன் உத்தியோகபூர்வமான பேச்சுகள் நடத்தப்படவுள்ளன' என்று தெரிவித்திருக்கிறார்.

நல்ல முயற்சிதான். ஆனால், பொதுவேட்பாளர் என்பது வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் நம்பிக்கையையும், ஆகக் குறைந்தது அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒருவராகவும் இருக்கவேண்டும்.

இன்றுள்ள நிலையில் தமிழ் மக்கள் மாத்திரமன்றி, சர்வதேச ரீதியிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தலைவராக சம்பந்தன் ஐயாவே நம் முன்னே தெரிகின்றார். அவரை வேட்பாளராக்க வேண்டும் அல்லது அவரின் ஆசியுடன் ஒருவரை தெரிவு செய்யவேண்டும்.

யார் போட்டியிடுவது என்பது முடிவானால்தான் இந்த முயற்சியை தொடர்ந்து கொண்டுசெல்ல முடியும். வேட்பாளரையும் என்ன கோரிக்கையை முன்வைத்து போட்டியிடுவது என்பதையும் தீர்மானித்தால்தான் அதற்கான பேச்சுகள் தொடர்ந்து முன்நகரும்.!

**-ஊர்க்குருவி.**

# கடுமையாகவும் பொறுப்பாகவும் சபாநாயகர் செயற்படவேண்டும்

## சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஒக். 24**

**பாராளுமன்றத்துக்கு தீ வைக்கவேண்டும், 225 உறுப்பினர்களை விரட்டியடிக்க வேண்டும் என இளைஞர்கள் குறிப்பிடுவதை நியாயப்படுத்தும் வகையில் ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் செயற்படுகிறார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

**சபாநாயகர் கடுமையாகவும், பொறுப்புடனும் செயற்படவேண்டும் எனவும் அவர் கோரினார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே தொடர்பில் கருத்து தெரிவிக்க விரும்பவில்லை.

225 பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாட்டை நாட்டு மக்கள் உன்னிப்பாக அவதானித்துள்ளார்கள்.

தேர்தல் ஒன்று இடம்பெற்றால் தக்க பதிலடி கொடுப்பார்கள்.

நாட்டு மக்களும் அரசியல் ரீதியில் இனிவரும் காலங்களில் மாறுபட்ட தீர்மானங்களை எடுக்கவேண்டும்.

பாராளுமன்றத்துக்கு தீ வைக்கவேண்டும், 225 உறுப்பினர்களையும் விரட்டியடிக்க வேண்டும் என்ற எதிர்ப்பு கடந்த ஆண்டு தோற்றம் பெற்றது.



இளைஞர்கள் மத்தியில் இந்த நிலைப்பாடு காணப்படுகிறது.

பாராளுமன்றம் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் தொடர்பில் மக்கள் மத்தியில் உள்ள தவறான நிலைப்பாட்டை நியாயப்படுத்தும் வகையில் ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் செயற்படுகிறார்கள்.

முன்னாள் சபாநாயகர் அனுர பண்டாரநாயக்க பாராளுமன்றத்தின் கௌரவத்தை பாதுகாக்க ஒரு சில நேரங்களில் கடுமையான தீர்மானங்களை எடுத்தார்.

ஆளும் மற்றும் எதிர்த்தரப்பு என்று பாரபட்சமில்லாமல் நடுநிலையாகச் செயற்பட்டார்.

ஆகவே தற்போதைய பாராளுமன்றம் குறித்து மக்கள் மத்தியில் நல்லதொரு நிலைப்பாடு கிடையாது.

ஆகவே சபாநாயகர் கடுமையாகவும், பொறுப்புடனும் செயற்படவேண்டும்-என்றார்.

### அகில இலங்கை பரதநாட்டிய போட்டி;

# வண்ணார்பண்ணை நாவலர் தேசிய மட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக். 24

இந்த வருடத்திற்கான அகில இலங்கை பரதநாட்டியப் போட்டியில் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலய மாணவர்கள் குழு தேசிய மட்டப் போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளது.

வலய மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்ற கீழ்ப்பிரிவு பெண்கள், ஆண்கள் குழு மாகாண மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளது.

குறித்த குழு நடனத்தை யாழ். வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலய நடன ஆசிரியர் சுஜீவா ரங்கநாதன் நெறிப்படுத்தியிருந்தார்.



இதனிடையே தமது பாடசாலையிலிருந்து இம்முறை முதன் முறையாக தேசிய மட்டப் போட்டிக்கு மாணவர்கள் தகுதி பெற்றுள்ளதாக பாடசாலையில் அதிபர் க. கலியுகன் தெரிவித்தார்.

(அ)

# எக்ஸ்பிரஸ் பேர்ள் இழப்பீடு குறித்து விரிவான அறிக்கையை வெளியிடுக!

## சஜித் பிரேமதாஸ கோரிக்கை

கொழும்பு, ஒக். 24

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலால் ஏற்பட்ட சேதம் நீர்கொழும்பு இருந்து பாணந்துறை வரையிலான கடல் பரப்பு மட்டுமே என்று முடிவெடுத்துள்ளனர் என்றும், என்றாலும் கடல் ஆமைகளின் உடல்கள் கிழக்கு கடற்கரை வரை குவிந்துள்ளன என்றும், பல்லுயிர் வகைமை மற்றும் மீனவர் சமூகத்தின் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கம் அபரிமிதமானது என்றும், நட்டஈடு பெறும் மீனவர்களின் எண்ணிக்கையும் இதனால் சிக்கலாக அமைந்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

துல்லியமான தரவு கணக்கீடு மேற்கொள்ளப்படாததால், பாணந்துறை முதல் நீர்கொழும்பு வரை மட்டுமே சேதமடைந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளதாகவும், இந்த வரம்பை மீறி பாதிப்பு ஏற்பட்டதா இல்லையா என்பதைக் கணக்கிடுவதற்கான தொடர்புடைய தரவு மீன்பிடி அமைச்சிடம் இருந்து கிடைக்கவில்லை என்றும், ஒப்பிட்டுப் பார்க்க முடியாத வகையில் தரவுகள் கிடைக்காததால், தற்போதேனும் சரியான தரவுகளை கணக்கிட்டு நிபுணர் குழுக்களுக்கு வழங்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

பாணந்துறை, நீர்கொழும்பு எல்லைக்கு அப்பால் உள்ள மீனவ சங்கங்கள், அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களின் மீன் பிடி தொடர்பான பிரச்னைகள் தொடர்பில் கருத்துத் தெரிவிப்பதற்கான வாய்ப்பை வழங்குமாறும், நிபுணர் குழுவிடம் உள்ள தரவுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து இழப்பீடு தொடர்பாக விரிவான அறிக்கையை தயாரிக்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

(அ)

ஈழநாடு
Eelanadu
24.10.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், ஐப்பசி 07

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பொது வேட்பாளருக்கான இணக்கப்பாடு ஏற்படுமா?

அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இடம்பெறுமென்று ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் மகாநாட்டில் அறிவித்திருக்கின்றார். தேர்தலுக்கு செல்வதைத் தவிர்க்க முடியாது. ஏனெனில், சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் நல்லாட்சிக்கான உத்தரவாதமும் உண்டு. நல்லாட்சி என்பது தமிழ் மக்களின் பிரச்னைக்கான தீர்வல்ல – மாறாக ஜனநாயக முறைப்படியான ஆட்சி. தேர்தலில் பங்குகொள்வதற்கான சூழல் – மக்கள் தங்களின் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம். ஊழலுக்கு எதிரான சட்ட உறுதிப்பாடு. பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான ஏற்பாடுகளாகவே இவைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. எனவே, இந்தப் பின்புலத்தில் தேர்தல்கள் மூலமான ஆட்சியை உறுதிப்படுத்த வேண்டியது கட்டாயமானது.

இவ்வாறானதொரு சூழலில் தமிழ் தேசிய கட்சிகள் ஜனாதிபதி தேர்தலை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றன? வழமைபோல் ஒரு வேட்பாளரின் வாக்குறுதியை நம்பி தமிழ் மக்களை வாக்களிக்கும்படி கூறப் போகின்றனவா – அல்லது ஜனாதிபதி தேர்தலை ஓர் அரசியல் பேரம்பேசலுக்கான வியூகமாகக் கையாளப் போகின்றனரா? எதனை செய்யப் போகின்றனர்?

குத்துவிளக்கு சின்னத்தில் ஒன்றுபட்டிருக்கின்ற கூட்டமைப்பு கொள்கையளவில் தமிழ் பொது வேட்பாளர் யோசனையை ஏற்றுக் கொண்டிருக்கின்றது. இது தொடர்பில் தமிழரசு கட்சியின் தலைவருடன் பேசவுள்ளதாகவும் அறிவித்திருக்கின்றது. அனைவரதும் இணக்கப்பாடு இதற்கு முக்கியமானது. ஒருவேளை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஒத்துவராவிட்டால் ஏனைய அனைவரும் ஓரணியாக இதனை முன்னெடுக்கலாம். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணியினர் கடந்த காலத்தில் தேர்தல் பகிஷ்கரிப்பு கோரிக்கையை முன்வைத்திருந்தனர். ஆனால், அதனை தமிழ் மக்கள் ஒரு விடயமாகவே கண்டுகொள்ளவில்லை. அதே போன்று கடந்த காலத்தில் சிலர் தமிழ் பொது வேட்பாளர் ஆலோசனை தொடர்பில் தமிழ்த் தேசிய கட்சிகளுடன் கலந்துரையாடியிருந்த போதிலும், சம்பந்தன் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. சம்பந்தன் போன்றவர்கள் எப்போதுமே அரசியலை ஒரு வியூகமாகப் பார்க்காதவர்கள். அப்படியாக சிந்திக்கவும் – செயல்படவும் அவர்களுக்குத் தெரியாது.

ரணில் விக்கிரமசிங்கவை பொறுத்தவரையில் தமிழ் கட்சிகளை அதிகம் கருத்தில்கொள்வதாகத் தெரியவில்லை. அவரைப் பொறுத்தவரையில் கடந்த காலத்தில் செய்த தவறை மீண்டும் செய்து விடாதீர்கள் என்று கூறிவிட்டு அமைதியாக இருகின்றார். அதாவது, 2005இல் விடுதலைப் புலிகள் அமைப்பு செய்த தவறை செய்து விடாதீர்களென்பதுதான் ரணில் கூறவருவது. ஆனால், ரணிலையோ அல்லது, ஏனைய சிங்கள தலைவர்களையோ கையாளுவதற்கு தமிழர் பக்கத்தில் என்ன இருக்கின்றது என்பதுதான் முதன்மையான கேள்வியாகும். இந்தக் கேள்விக்கான பதிலாகவே தமிழ் பொது வேட்பாளர் யோசனை வெளிவந்தது. ஆனால், கடந்த காலத்தில் தமிழ் பொது வேட்பாளர் நகைச்சுவைக்குரிய ஒன்றாகப்பட்டது என்பதையும் மறந்துவிடக்கூடாது. இவ்வாறானதோர் இணக்கப்பாடு கொள்கையளவில் முதலில் அனைத்து கட்சிகள் மத்தியிலும் ஏற்பட வேண்டும். அதன் பின்னர் விடயத்தை செயல்படுத்துவது பற்றி ஆராய வேண்டும்.

# சற்குருக்களில் மேலானவர் சீரடி சாயி பாபா

சற்குரு சீரடி சாயி பாபா ஓர் அவதார புருஷர். இவ்வுலகில் சற்குருக்கள் பலர் அவதரித்தாலும், சீரடிசாயி பாபாவின் அவதரிப்பானது, மிகவும் ஆன்மீக அதிர்வுகளைக் கொண்டது. இவர் எந்த மதத்தைச் சார்ந்தவர், எந்த மதத்தைப் பின்பற்றினார் என்பதனை, மற்ற மகான்களைப் போல் சுலபமாக விடை சொல்லமுடியாது. இவர் அனைத்து மதங்களுக்கும் உரித்துடையவர். எந்த மதத்தைப் பற்றிய மாற்றுக் கருத்துகள் இவரிடம் கிடையாது.



குரு வழிபாடு இந்து சமயத்தில் ஓர் அங்கம். குருவிடம் சரணடைந்தால் சகல சௌபாக்கியமும் கிட்டும். தெய்வத்தை விட குரு வலிமையானவர். இதுவரை தோன்றிய எத்தனையோ ஆன்மீக குருக்களில், மகான் சீரடி சாயி பாபா முதன்மையானவர். சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர் இவர் சமாதியடைந்துவிட்டார். மாதா, பிதா, குரு. தெய்வம் என்ற வாக்கியத்தில் மாதா வையும் பிதாவையும் எவராலும் தேர்ந்தெடுக்க முடியாது. ஆனால் வணக்கத்துக்குரிய குருவை யும், வழிபடும் தெய்வத்தையும் தெரிவு செய்ய முடியும். குருவை தேர்ந்தெடுத்தாலும், குருவானவர் எமது தேர்வை அங்கீகரித்தாக வேண்டும். அப்போதுதான் குருவின் அருள் பாக்கியம் கிட்டும். ஆனால் சீரடி சாயி பாபா தன்னை வழிபடும் அனைத்து பக்தர்களையும் ஏற்றுக் கொள்பவர்.

"எவன் என்னுடைய திருவடிகளை அடைகின்றானோ அவனுடைய அத்தனை எண்ணங்களையும் ஈடேற்றுவேன். என்னை எந்த உருவத்தில் பக்தன் பார்க்க விரும்புகிறானோ அதே உருவத்தில் அவனுக்கு காட்சியளிப்பேன். எவன் என்னை அடைக்கலம் அடைகின்றானோ அவன் பாதத்தை நான் சுமக்கின்றேன். எவன் தன் உடல், மனம், தனம், செய்கைகளை எனக்கே அர்ப்பணித்து என்னை தியானம் செய்கின்றானோ, எவன் தன் துன்பங்களை என்னிடம் ஒப்புவிக்கின்றானோ, எவன் சாயி நாமத்தை தினமும் ஜெபிக்கின்றானோ, அவன் பேத, பாவங்களில் இருந்து விடுபட்டு என்னையே அடைகின்றான்." இது சீரடி சாயி கூறிய உறுதிமொழி.

சீரடி சாயி பாபாவின் மகாச மாதி தினம் வருகின்ற இன்று (ஒக்.24) விஜயதசமியன்று வருகிறது. கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள சீரடி மந்திரில், முழு நாள் நிகழ்ச்சிகளாக யாகம், பூஜைகள், பஜனை, அன்னதானம் என்று நடைபெறுகின்றன. விஷேடமாக சீரடி சாயி பக்தர்களின் காணிக்கையாக, இலங்கையில் சீரடி சாயி பாபாவுக்கு, முதல் முதலாக 54 சவரனில் முழு தங்க மகுடம், விலையுயர்ந்த பச்சை மரகதக்கல் பதிக்கப்பட்டு சூட்டப்பட விருக்கிறது. அன்று மாலை புதிதாக மரக்குதிரைகள் பூட்டப்பட்ட சித்திரத்தேரோட்டம் இடம்பெறும். ஒக்ரோபர் 25 தொடக்கம் 27ஆம் திகதி வரை, இலங்கையில் முதல் முறையாக, தினமும் மாலை 6 மணிக்கு, சீரடி மந்திரில், இந்திய தொலைக்காட்சி புகழ் ஆன்மீகப் சொற்பொழிவாளர் திருமதி சௌமியா அபிஷேக் ராஜூ அவர்களின் சிறப்பு சீரடி சாயி சொற்பொழிவு நடைபெறவுள்ளது. இவர் இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, சிரமப்பட்டு பல நாட் களாக அலைந்து திரிந்து, சீரடி சாயி பாபாவின் சீடர்கள் மற்றும் அவருடன் பழகியவர்கள், வாழ்ந்தவர்கள் அவர்களது குடும்ப அங்கத்த வர்களைக் கண்டுபிடித்து, பாபாவின் பல அற்புத லீலைகளை தெரிந்துகொண்டவர். சீரடி சாயி பாபாவின் நடவடிக்கைகளை இடைவிடாத தேடலின் மூலமாக அயராது ஆராய்ச்சி செய்தவர். தனது சொற்பொழிவில் சீரடி சாயி பாபாவைப்பற்றிய பல அற்புதங்களை வெளிப்படுத்தவுள்ளார்.

**எஸ்.என்.உதயநாயகம் –**
*சீரடி சாயி மத்திய நிலையம் சிறிலங்கா*

# அசமந்தமாக செயற்படும் புளியங்குளம் பொலிஸார்!

## வவுனியா வடக்கு கிராம அலுவலர்கள் சுகவீன விடுமுறைப் போராட்டம்!

வவுனியா, ஒக். 24

புளியங்குளம் பொலிஸ் நிலைய பொலிஸாரின் அசமந்தப்போக்கை கண்டித்து வவுனியா வடக்கு கிராம உத்தியோகத்தர்கள் சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த விடயம் தொடர்பாக ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கத்தினால் வவுனியா வடக்கு பிரதேச செயலருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கையில் -

புளியங்குளம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் அரசகாணி தொடர்பான வெளிக்கள கடமையின்போது கிராம உதரதியோகத்தர் மா.சுரேந்தர் என்பவர் பொது மக்களால் அச்சுறுத்தப்பட்டு அரச கடமைக்கு இடையூறு விளைவித்து, ஒரு கிராம உத்தியாகத்தர் தமது கடமையை செய்யவிடாது தடுத்தமை தொடர்பில் கடந்த 25.09.2023 மற்றும் 17.10.2023 திகதியுமாக மூன்று முறைப்பாடுகள் புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்துள்ளார்.

மேலும் தொடர்ந்து கடமை புரிவதில் உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் எமது சங்கத்துக்கு எழுத்து மூலம் அறியத் தந்துள்ளார்.

இது தொடர்பில் இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காமையால், புளியங்குள பொலிஸ்நிலைய பொலிசாரின் அசமந்தப்போக்கினை கண்டித்து எமது சங்க உறுப்பினர்கள் இன்று ஒரு நாள் சுகயீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

மேலும் கிராம உத்தியோகத்தரான எமது சங்க உறுப்பினர் மா.சுரேந்திரனின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டும் என்பதோடு அரச கடமைக்கு இடையூறு செய்தவர்கள் மற்றும் இடையூறு செய்வோரை கைது செய்யவேண்டும் என குறித்த கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

**ஒக்ரோபர் - 24 செவ்வாய்க்கிழமை**
**சோபகிருது வருடம் - ஐப்பசி 07**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 07.30 - 09.00 |
| ராகு காலம் | : | 03.00 - 04.30 |
| திதி | : | ஏகாதசி |



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். அந்தஸ்து உயரும்நாள்.

**இடபம்**
கணவன்- மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில செலவுகளைக் குறைக்க முடியாமல் திணறுவீர்கள். வியாபாரத்தில் விரயம்வரும். அதிகாரிகளை பகைத்துக் கொள்ளாதீர்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**கடகம்**
கடினமான காரியங்களை எளிதாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**சிம்மம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகப் பேசி சாதிப்பீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர் ஆவர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். அமோகமான நாள்.

**கன்னி**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். புதிய வாகனம் வாங்குவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். புதிய சிக்கல்கள் தீரும். புதுமை படைக்கும் நாள்.

**துலாம்**
பிரியமானவர்களின் சந்திப்புநிகழும். புது வேலை அமையும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். தைரியம் கூடும் நாள்.

**தனுசு**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தொடர்ச்சி. சக ஊழியர்கள் உதவுவார்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே முடிப்பது நல்லது. வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள்.

**கும்பம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். சக ஊழியருடன் விவாதம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மீனம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். பயணங்கள் சிறப்பாக அமையும். புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். சக ஊழியர்கள் முக்கியத்துவம் தருவார்கள். சாதிக்கும் நாள்.

# ஆரியம், திராவிட பிரச்னை இந்தியாவை பிரித்தாள்வதற்கான பிரிட்டனின் உத்தி!

## தமிழ்நாடு ஆளுநர் சொல்கிறார்

திருச்சி, ஒக். 24

“உண்மையில் இங்கு ஆரியம், திராவிடம் கிடையாது. இந்தியாவை பிரித்தாளும் சூழ்ச்சிக்கான பிரிட்டிஷாரின் உத்திகளில் இதுவும் ஒன்று. சுதந்திர போராட்டம் தொடங்கும் நேரத்தில் இதுபோன்ற கருத்தாக்கத்தை அவர்கள் பரப்பினார்கள்” என்று தமிழக ஆளுநர் ஆர். என். ரவி கூறியுள்ளார்.

திருச்சியில் நடந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ”தமிழகத்தின் உண்மையான வரலாறை அழிக்க இங்கு தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உண்மையான வரலாற்றை மறைத்து அதற்கு நிகரான வரலாற்றை எழுத முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அவர்கள், தமிழகத்தில் இன ரீதியாக பிரிவினை இருப்பது போன்றதொரு தவறான தகவலை உருவாக்கினார்கள்.

திராவிடம், ஆரியம் என்ற இனங்கள் இருப்பது போன்ற பிரிவை உருவாக்கினார்கள். திராவிடர்கள் என்பவர்கள் தனி இனம் என்ற கருத்தாக்கத்தின் தந்தை யார் என்று தெரியுமா? அவர்தான் ரொபேர்ட் கால்ட்வெல். அவர்தான் திராவிடர்கள் தனி இனம் என்ற கருத்தாக்கத்தை உருவாக்கினார். உண்மையில் ரொபேர்ட் யார் தெரியுமா? நான் இவர் போன்ற எண்ணற்ற மனிதர்களின் பின்னணி குறித்து லண்டன் சென்று படித்தேன்.

1813 பிரிட்டிஷ் பாராளுமன்றம் ஒரு சட்டத்தை உருவாக்கியது. அதுதான் இந்தியா சாட்டார்ட் சட்டம் 1813. அச் சட்டத்தின்படி, இந்தியாவுக்கு பிரிட்டிஷ் அரசு மிஷினரிகளை அனுப்பியது. மிஷினரிகள் மூலம் இந்தியாவின் கலாசார தூய்மையை அழிப்பதுதான் பிரிட்டிஷாரின் நோக்கமாக இருந்தது. அதன் அடிப்படையில், மிஷினரிகளுக்கான தன்னார்வலர்கள் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இந்த பணிக்கு அங்குள்ள படித்தவர்கள் யாரும் வரவில்லை. காரணம், இதைவிட அங்கு ஏராளமான வேலை வாய்ப்புகள் அவர்களுக்கு இருந்தது.

இதனால், பிரிட்டிஷ் அரசாங்கம், இந்த பணிகளுக்காக அங்கிருந்த கல்வியை பாதியிலேயே விட்டவர்களை தேர்வு செய்தது. அப்படி பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்தியவர்களில் ஒருவர்தான் இந்த ரொபேர்ட் கால்ட்வெல். பள்ளிப்படிப்பைக் கூட முழுமையாக முடிக்காத, கல்லூரிகளில் படிக்காத கால்ட்வெல், இங்கு வந்தபிறகு, மொழியியல் நிபுணராக மாறியிருப்பது ஆச்சரியம் அளிக்கிறது. திராவிட மொழிக்கான இலக்கணத்தை அவர் எழுதியிருக்கிறார். மேலும், திராவிடர்கள் தனி இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று அவர் கூறியுள்ளார்.

உண்மையில் இங்கு ஆரியம், திராவிடம் கிடையாது. இந்தியாவை பிரித்தாளும் சூழ்ச்சிக்கான பிரிட்டிஷாரின் உத்திகளில் இதுவும் ஒன்று - என்றார். (ஐ)

# உதயநிதியை அமைச்சராக்கியதே தி. மு. க. அரசாங்கத்தின் சாதனை!

## எடப்பாடி பழனிசாமி சாடல்

சேலம், ஒக். 24

இரண்டரை ஆண்டுகளில் உதயநிதியை அமைச்சராக்கியது தான் தி. மு. க. அரசின் சாதனை என அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ. தி. மு. கவில் பல்வேறு கட்சிகளில் இருந்தும் விலகியவர்கள் நேற்று சேர்ந்தனர். இவர்களை சேலத்தில் வரவேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறுபான்மை மக்களுக்கு எதிராக அ. தி. மு. க. இருப்பது போன்று வேண்டுமென்றே திட்டமிட்டு மாய தோற்றத்தை கடந்த காலத்தில் தி. மு. க. மற்றும் அதன் கூட்டணி கட்சியினர் உருவாக்கினர். அ. தி. மு. க. ஆட்சி காலத்தில் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக பேணிகாக்கப்பட்டது. பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது பல்வேறு மாநிலங்களில் வன்முறை நிகழ்ந்தது. ஆனால், அப்போது முதல்வராக இருந்த ஜெயலலிதா சிறுபான்மை மக்களுக்கு முழு பாதுகாப்பு வழங்கி சிறிய பிரச்னைகூட இல்லாமல் பார்த்துக் கொண்டார்.

கூட்டணி என்பது தேர்தல் நேரத்தில் அவ்வப்போது அமைக்கப்படுகிறது. கொள்கை என்பது நிலையானது. அ. தி. மு. க. நிலையான கொள்கையை கொண்டது. அ. தி. மு. க-வுக்கு சாதி, மதம் வேறுபாடு கிடையாது. அவரவர் மதம் அவர்களுக்கு புனிதமானது. அதில் யாரும் தலையிட முடியாது. தி. மு. க. அரசின் இரண்டரை ஆண்டு ஆட்சி காலத்தில் மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை. உதயநிதியை அமைச்சராக்கியது தான் தி. மு. க. அரசின் சாதனை - என்றார். (ஐ)

# பா. ஜ. கவுக்கு எதிரான கூட்டணி என்பது பழனிசாமியின் நரித்தனம்!

## முதல்வர் ஸ்டாலின் சாடல்

சென்னை, ஒக். 24

பா. ஜ. கவை விமர்சிக்காமலேயே பா. ஜ. கவுக்கு எதிராக கூட்டணி அமைக்கிறேன் என்று எடப்பாடி பழனிசாமி போடும் நாடகம், மிகப்பெரிய நரித்தனத்தின் அடையாளம். இவ்வாறெல்லாம் நடந்து கொள்ள வேண்டும் என்று அவர் ஆட்டுவிக்கப்படுகிறார். தேர்தல் நெருங்க நெருங்க அதுவும் அம்பலம் ஆகிவிடும் என முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமீபத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி பேசியிருக்கிறார். பத்திரிகைகளில் படித்துப் பார்த்தேன். அது பேச்சு அல்ல, வயிற்றெரிச்சல். தன்னுடைய வயிற்றெரிச்சலை வார்த்தைகளாகக் கொட்டி இருக்கிறார். தி. மு. க. ஆட்சிக்கு வந்து எந்த ஒரு புதிய திட்டத்தையும் கொண்டுவரவில்லை என்று பேசியிருக்கிறார். இந்த இரண்டரை ஆண்டுகால சாதனைகளை சொல்ல ஆரம்பித்தால் அதற்கே இரண்டு மணி நேரமாகும். அவ்வளவு சாதனைகளை செய்திருக்கிறோம்.

பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த ‘பச்சைப் பொய்யர்’ பழனிசாமி, சொன்னதிலேயே பெரிய பொய் எது என்றால் அ. தி. மு. க. ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டங்களைத்தான் நாடா வெட்டி நாம் தொடங்கி வைக்கிறோமாம். பிளான் போட்டு, கட்டி முடித்து வைத்துவிட்டார்களாம். நாம் சென்று நாடா வெட்டிவிட்டு வந்துவிட்டோமாம். யாரு? பொய்ச்சாமி மன்னிக்கவும் பழனிசாமி பேசுகிறார்.

தி. மு. க. குடும்பக் கட்சியாம். ஆமாம், குடும்பக் கட்சி தான்! அழுத்தம் திருத்தமாக சொல்கிறேன், தி. மு. க. குடும்பக் கட்சிதான். கோடிக்கணக்கான தமிழ் குடும்பங்களை வாழவைக்கும் கட்சி, தி. மு. க. அண்ணா, கருணாநிதி காட்டிய பாதையில், ஒற்றைக் கையெழுத்தில் கோடிக்கணக்கான குடும்பங்களின் மனதில் மகிழ்ச்சியை உருவாக்கிய கட்சி தி. மு. க.

பா. ஜ. கவை விமர்சிக்காமலேயே பா. ஜ. கவுக்கு எதிராக கூட்டணி அமைக்கிறேன் என்று அவர் போடும் நாடகம், மிகப்பெரிய நரித்தனத்தின் அடையாளம். இவ்வாறெல்லாம் நடந்துகொள்ள வேண்டும் என்று அவர் ஆட்டுவிக்கப்படுகிறார். தேர்தல் நெருங்க நெருங்க அதுவும் அம்பலம் ஆகிவிடும் - என்றார். (ஐ)

# அமைச்சரை மாற்றுவதால் மட்டும் தீர்வு கிடைக்காது!

## சுட்டிக்காட்டுகிறார் ஜீ. எல். பீரிஸ்!

கொழும்பு, ஒக். 24

**நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்காக அமைச்சரை மாற்றுவது மட்டும் தீர்வாக அமையாது என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் குறிப்பிட்டார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்-**

இந்தப் பதவி மாற்றமானது தலை வலிக்குத் தலையணையை மாற்றுவது போன்றது. இவை அனைத்தும் கண் கட்டும் வித்தைகள்.

இவை மூலம் பிரச்னைகள் தீர்க்கப்படாது.



நாட்டில் இருக்கும் சுகாதார பிரச்னைகள் ஒரு அமைச்சரை மாற்றி இன்னொரு அமைச்சரை நியமிப்பதன் மூலம் தீர்க்கப்படும் என்று கூறினால் இதனை நம்ப முடியுமா?

சங்கீதக் கதிரை விளையாட்டே இதில் இடம்பெறுகின்றது.

மக்களின் எதிர்ப்பு எரிமலையை போன்று எரியும் சந்தர்ப்பத்தில் மக்களுக்கு அரசாங்கத்தின் பதில் இதுவாய் இருக்கின்றது.

வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுப்பதே இதற்கான சரியான தீர்வு-என்றார். (அ)

# மாங்கொல்லை ஞானவைரவர் ஆலயம் 33 வருடங்களின் பின்னர் புதுப்பொலிவு



யாழ்ப்பாணம், ஒக். 24

காங்கேசன்துறை மேற்கு, மாங்கொல்லை ஞான வைரவர் ஆலய கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

நாளை புதன்கிழமை மாலை 3 மணியளவில் கணபதி ஹோமத்துடன் பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

குறித்த ஆலயம் கடந்த 33 வருட காலமாக இராணுவ உயர் பாதுகாப்பு வலய பகுதிக்குள் இருந்த நிலையில், கடந்த ஜூன் மாத கால பகுதியில் ஆலயச் சூழலையும், அதனை அண்டிய சில பிரதேசங்களில் இருந்தும் இராணுவத்தினர் வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# குடிபோதையில் வாகனம் ஓட்டுவோரை பிடித்தால் பொலிஸாருக்கு 5000 ரூபாய்!

கொழும்பு, ஒக். 24

குடிபோதையில் வாகனம் ஓட்டுபவர்களை கைது செய்யும் ஒவ்வொரு பொலிஸ் அதிகாரிக்கும் 5,000 ரூபாய் உதவித் தொகை வழங்கும் முன்னோடி திட்டத்தை செயல்படுத்த போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்புப் பிரிவு தீர்மானித்துள்ளது.

இந்த திட்டம் 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காலகட்டத்தில், குடிபோதையில் வாகனம் ஓட்டும் ஒருவரை கைது செய்யும் பொலிஸ் அதிகாரிக்கு அவரது சம்பளத்தில் ரூ. 5000 கூடுதல் கொடுப்பனவாகவும் மேலும் கைது செய்பவர்களுக்கு அதிகபட்சமாக ஐந்தாயிரம் ரூபாய் ரொக்கப்பரிசும் வழங்கப்படும் என போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதிகாரிகளை ஊக்குவிக்கவும், விபத்துகளைத் தடுக்கவும் இந்த முன்னோடித் திட்டம் தொடங்கப்பட்டதாக பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்தார். (அ)

# முறைகேடாக வாகனங்கள் இறக்குமதி பல கோடி ரூபாய் வரி வருவாய் இழப்பு

கொழும்பு, ஒக். 24

மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான 119 அனுமதிப்பத்திரங்களை முறைகேடாக பயன்படுத்தி வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இவற்றில் 75 வாகனங்கள் ஒரு நிறுவனத்தினால் இலங்கைக்கு கடத்தப்பட்டதாக பாராளுமன்ற வழிவகைகள் பற்றிய குழு அறிவித்துள்ளது.

முறைகேடான முறையில் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டதன் மூலம் பல கோடி ரூபாய் வரி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் கடத்தல்காரர்கள் பெருமளவு பணம் சம்பாதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலத்திரனியல் கார்களை இறக்குமதி செய்ய உரிமம் வழங்குவதை உடனடியாக நிறுத்தவும், கடத்தல்காரர்களால் ஏமாற்றப்பட்ட வரிப் பணத்தை வசூலிக்கவும் பாராளுமன்றத்தின் வழிவகைகள் பற்றிய குழு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. (அ)

# விவசாயிகளுக்கு வாயு துப்பாக்கி!

கொழும்பு, ஒக். 24

வன விலங்குகளினால் ஏற்படும் பயிர் சேதங்களை தடுக்கும் வகையில் விவசாயிகளுக்கு வாயுத் துப்பாக்கிகள் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவினால் வழங்கப்பட்டன.

இவர் அங்குனுகொலபெலஸ்ஸவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் விவசாயிகளுக்கு 268 வாயுத் துப்பாக்கிகளை வழங்கினார்.

இதன்போது உரையாற்றிய விவசாய அமைச்சர்-

வன விலங்குகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்கள் அதிகரித்துள்ளன.



குரங்கு, மயில், மர அணில் போன்ற விலங்குகளினால் ஏற்படும் பாதிப்புகள் அதிகரித்துள்ளன.

வனவிலங்குகளினால் ஏற்படும் பயிர் சேதங்களை தடுக்கும் வகையில் விவசாயிகளுக்கு வாயுத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன-என்றார். (அ)

# சிறீதரன் எம்.பியின் ஏற்பாட்டில் பாடசாலைக்கு குடிதண்ணீர்வசதி

கிளிநொச்சி, ஒக். 24

அடிப்படை உட்கட்டுமான வசதிகள் அற்ற நிலையில் இயங்கிவரும் கிளிநொச்சி மலையாளபுரம் திருவள்ளுவர் ஆரம்பப் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட குடிதண்ணீர்க் கிணறும் அதனுடன் இணைந்த குடிதண்ணீர் வழங்கல் கட்டமைப்பும் நேற்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் மாணவர்களின் பயன்பாட்டுக்கு கையளிக்கப்பட்டது.



இப்பாடசாலையில் நீண்டகாலமாக நிலவிவந்த குடிநீர்த் தேவையை நிவர்த்திசெய்யும் நோக்கில், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் கோரிக்கைக்கு அமைவாக, நியூசிலாந்தில் வசிக்கும் அரியதாஸ் செல்வதாஸ் எனும் நன்கொடையாளரின் நிதிப்பங்களிப்பில், அவரது தாயாரான அமரர். மேரிரெஜினா அரியதாஸ் ஞாபகார்த்தமாக இக் குடிநீர்க்கிணறு அமைக்கப்பட்டு இன்றையதினம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனிடம், பாடசாலை அதிபரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, ஒலிபெருக்கி வசதியையும், சுற்று வேலி அமைக்கும் பணிகளையும் காலக்கிரமத்தில் மேற்கொள்வதாக பாராளுமன்ற உறுப்பினர் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வெள்ளி, ஞாயிறுகளில் தனியார் வகுப்புகளுக்கு தடை விதித்த கிழக்கு மாகாண கல்வி அமைச்சு!

திருமலை, ஒக். 24

கிழக்கு மாகாணத்தில் ஞாயிறு மற்றும் வெள்ளிக்கிழமைகளில் தனியார் கல்வி வகுப்புகளை நடத்துவதைத் தடை செய்து மாகாண கல்வி அமைச்சு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அறநெறிக் கல்வியில் ஈடுபடுவதற்கு போதிய கால அவகாசம் இல்லாத வகையில் தனியார் கல்வி வகுப்புகள் நடத்தப்படுகின்றமையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மாகாண கல்விச் செயலாளர் சட்டத்தரணி எச்.இ.எம். டபிள்யூ.ஜி.திஸாநாயக்க விடுத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 02.00 மணி வரையிலும், மழை பெய்யும் நாட்களில் முழு நாட்களிலும் தனியார் வகுப்புகள் நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் ஆராய வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், பொலிஸ் மற்றும் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் உதவியை நாடுமாறு சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, திருகோணமலை வடக்கு, கந்தளாய், அம்பாறை, மஹாஓயா மற்றும் தெஹியத்தகண்டி ஆகிய பிராந்திய கல்விப் பணிப்பாளர்களுக்கு இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. (அ)

# ஹரீன், மனுஷவின் மனுக்கள் ஒத்திவைப்பு!

கொழும்பு, ஒக். 24

ஐக்கிய மக்கள் சக்தியின் தீர்மானத்துக்கு எதிராக அமைச்சர்களான ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்காரவினால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையை உயர்நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

நியாயமான விசாரணை இன்றி கட்சி உறுப்புரிமையை இரத்து செய்த ஐக்கிய மக்கள் சக்தியின் தீர்மானம், சட்டத்திற்கு முரணானது என அமைச்சர்களான ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

மேலும் குறித்த மனுக்கள் மீதான விசாரணையை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்க உயர் நீதிமன்றம் நேற்று தீர்மானித்தது. (அ)

# வடக்கு, கிழக்கு மீள்குடியேற்றம் 3 வருடங்களுக்குள் பூர்த்தியாகும்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறுகிறார்



கொழும்பு, ஒக். 24

அடுத்த மூன்று வருடங்களுக்குள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்களின் மீள்குடியேற்றம் பூர்த்தி செய்யப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த 2 இலட்சத்து 74 ஆயிரத்து 120 குடும்பங்களைச் சேர்ந்த 9 இலட்சத்து 17 ஆயிரத்து 143 பேர் அந்த மாகாணங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, ஆயிரத்து 701 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 999 பேரே இன்னும் மீள்குடியேற்றப்பட உள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்தார். (அ)

# புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளில் சிக்கல்கள்

கொழும்பு, ஒக். 24

அண்மையில் நிறைவடைந்த ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத்தாளில் பல சிக்கல்கள் காணப்பட்டதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதாக அவர்களின் பெற்றோர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

பாதிப்புக்கு உள்ளான மாணவர்களின் பெற்றோர்கள் அமைப்பினால் கண்டியில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து இந்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு தீர்வு வழங்கும் வகையில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் வெட்டுப்புள்ளிகள் குறைக்கப்படவேண்டும் எனவும் பெற்றோர்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ)

# மின்சார கட்டண அதிகரிப்பை எதிர்த்து மக்கள் ஆர்ப்பாட்டம்





கொழும்பு, ஒக். 24

மின் கட்டணத்தை அவ்வப்போது அதிகரிக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து தலவாக்கலை மற்றும் கினிகத்தேன நகரங்களில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தலவாக்கலை நகரில் ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் அசோக சேபால ஏற்பாட்டில் கினிகத்தேன நகரில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

பதாதைகளை ஏந்தியவாறும் அரசாங்கத்திற்கு எதிராக கோசங்களை எழுப்பியவாறும் பெருந்தோட்ட தொழிலாளர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் இதில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வடக்கு மாகாண இ.போ.சவுக்கு விரைவில் புதிய பஸ்கள் வரும்!

## அங்கஜனின் கோரிக்கைக்கு அமைச்சர் பதில்

யாழ்ப்பாணம், ஒக். 24

வடக்கு மாகாணத்துக்கு போதிய பஸ்களை வழங்குவதோடு, போதிய நடத்துநர்கள் மற்றும் சாரதிகளை நியமிக்குமாறு, தன்னால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு மாகாணத்தில் பயணிகள் போக்குவரத்துச் சேவையை ஒழுங்குமுறைப்படுத் துவதற்காக டிப்போக்களுக்கு போதிய பஸ்களை வழங்குவதோடு, போதிய நடத்துநர்கள் மற்றும் சாரதிகளை நியமிக்குமாறு, போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்திருந்தேன்.

அதன் பிரகாரம் அமைச்சின் செயலாளரினால், மேற்குறித்த விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது- என்றார். (அ)

# ஜனாதிபதியின் சீன விஜயம் இரு நாடுகளும் கூட்டறிக்கை

கொழும்பு, ஒக். 24

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சீன விஜயத்தின் போது மேற்கொள்ளப்பட்ட முக்கிய தீர்மானங்கள் தொடர்பில் இருநாடுகளும் கூட்டறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சீன ஜனாதிபதி மற்றும் துணை பிரதமரைச் சந்தித்து விரிவான கலந்துரையாடல்களில் ஈடுபட்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன - இலங்கை பாரம்பரிய நட்புறவு, பரஸ்பர ஒத்துழைப்பை விரிவுபடுத்துதல், பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்களில் இந்த விஜயத்தின்போது பொதுவான புரிந்துணர்வு எட்டப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாய்வான் சீன நிலத்திலிருந்து பிரிக்கப்பட முடியாத ஒரு பகுதி என ஏற்றுக்கொண்டு, ஒரே சீனா கொள்கைக்கான தனது அர்ப்பணிப்பை இலங்கை மீண்டும் உறுதிப்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை நிலப்பரப்பிற்குள் சீனாவிற்கு எதிரான பிரிவினைவாதச் செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது என இலங்கை மீண்டும் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்ளவும் இருநாடுகளும் இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# உர விநியோகத்துக்கு பொறுப்பான இரு உயர் அதிகாரிகள் இடமாற்றம்!

## விவசாய அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, ஒக். 24

விவசாய அமைச்சில் உர விநியோகத்துக்கு பொறுப்பாக விருந்த உயரதிகாரிகள் இருவரை உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்ய விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

பெரும்போகத்தில், விவசாயிகளுக்கு தேவையான யூரியா உரத்தை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கி 3 மாதங்கள் கடந்தும் இதுவரை விலை மனு கோருவதற்கு நடவடிக்கை எடுக்காமையே இதற்கான காரணமாகும்.

பல நாடுகளுக்கிடையே நிலவும் மோதல்கள் காரணமாக உலக சந்தையில் யூரியா உள்ளிட்ட அனைத்து உரங்களின் விலையும் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சரவையின் அனுமதி கிடைத்த மே மாதத்தில் உரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தால், யூரியா உரத்தை மிகக் குறைந்த விலையில் கொள்வனவு செய்திருக்க முடியும் என விவசாய அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த காலகட்டத்தில், ஒரு மெற்றிக் தொன் யூரியாவை 350 டொலருக்கு கொள்வனவு செய்திருக்கலாம்.

எனினும், தற்போது ஒரு மெற்றிக் தொன் யூரியா 650 டொலர் வரை அதிகரித்துள்ளது.

இதனால் அரசாங்கத்திற்கு பாரிய நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு கூறியுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் போகத்தில் உரத்தின் விலை அதிகரிக்கும் சாத்தியமுள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சீன உர விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதால், உரத்தின் விலை அதிகரிக்கும் சாத்தியமுள்ளதாக விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க கூறினார்.

இம்முறை போகத்திற்கு தேவையான யூரியா உரம், போதுமானளவு கையிருப்பில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 20 ஆம் திகதியின் பின்னர் யூரியா உரம் நாட்டுக்கு கிடைக்கும் எனவும் விவசாய அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். (அ)

# மக்களின் குருதியை உறிஞ்சினால் தேர்தலில் நல்ல பதிலடி கிடைக்கும்

## ஜனாதிபதியை எச்சரிக்கிறார் எஸ்.எம்.மரிக்கார்

கொழும்பு, ஒக். 24

நாட்டுக்கு புதிய வருமானத்தை ஈட்டுவதற்கு எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

மக்களின் குருதியை உறிஞ்சினால் அடுத்த தேர்தலில் நல்ல பதிலடி கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

ஹோமாகம பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதிபர் ரணில் விக்ரமசிங்க ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு பகுதிகளுக்கு நடைமுறைக்கு சாத்தியமற்ற விடயத்தை தெரிவித்து வருகிறார்.

நாட்டிற்கு புதிய வருமானத்தை ஈட்டுவதற்கு எந்த வித திட்டத்தையும் அவர் முன் வைக்கவில்லை.

2015 ஆம் ஆண்டு இலங்கையை 60 மாதங்களில் அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றுவேன் என தெரிவித்தார்.

அதேபோன்றே தற்போதும் 2048 ஆம் ஆண்டாகும் போது அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவோம் என குறிப்பிட்டுள்ளார்.

இன்றிரவு எவ்வாறு உண்பது காலை எவ்வாறு பாடசாலைக்கு செல்வது என்றே சாதாரண மக்கள் சிந்திக்கின்றனர்.

இந்த நிலையில் கட்டணங்கள் மேலும் அதிகரிக்கப்படுகின்றன. நியாமான அதிகரிப்பிற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கமாட்டார்கள்.

இவ்வாறு குருதியை உறிஞ்சினால் அடுத்த தேர்தலில் நல்ல பதிலடி கிடைக்கும். மக்களை கசக்கி பிழியும் வரவு-செலவுத் திட்டம் ஒன்றே உருவாக்கப்படுகிறது.

பொதுஜன பெரமுனவுக்கு ஜனாதிபதி ஆதரவு வழங்கு வாரா என்பது தெரியாது. அவ்வாறு நடக்கவில்லை என்றால் பாராளுமன்றத்தை கலைத்து தேர்தலுக்கு செல்ல வேண்டும்- என்றார்.

(அ)

# புத்தளத்தில் யானை உயிரிழப்பு



கொழும்பு, ஒக். 24

புத்தளம், சாலியவெவ பிரதேச செயலகத்திற்கட்பட்ட நீலபொம்ப கிராமத்தின் வீடு ஒன்றுக்கு அருகாமையில் உள்ள தனியார் காணியொன்றில் யானையொன்று உயிரிழந்துள்ளது.

சுமார் 25 வயது மதிக்கத்தக்க யானை ஒன்றே உயிரிழந்துள்ளதாக கருவலகஸ்வெவ வனஜீவராசித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

உயிரிழந்துள்ள யானையின் உயரம் சுமார் 8 முதல் 9 அடி எனவும் யானையின் கொம்பு சுமார் இரண்டு அடி நீளம் எனவும் கருலகஸ்வெவ வனஜீவராசித் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இந்த கொம்பு யானை எவ்வாறு உயிரிழந்தது என்பது தொடர்பான மேலதிக விசாரணைகளை கருவலகஸ்வெவ வனஜீவராசித் திணைக்கள அதிகாரிகளுடன் சாலியவெவ பொலிஸாரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் 7000 விரிவுரையாளர்களுக்கு தட்டுப்பாடு

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 24

நாட்டில் தற்போது 7000 பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அதன்படி, தற்போதுள்ள விரிவுரையாளர்களில் 700 தொடக்கம் 800 பேர் பணியை விட்டு வெளியேறியுள்ளதாகவும் 200 முதல் 300 பேர் விடுமுறையில் சென்றுள்ளதாகவும், மற்றுமொரு குழு வெளிநாட்டு பயிற்சிக்காக சென்றுள்ள நிலையில் 12, 900 விரிவுரையாளர்கள் இருக்க வேண்டிய இடத்தில் தற்போது 5, 900 பேர் மாத்திரமே இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பல்கலைக்கழக முறைமையின் பிரச்னைகள் தொடர்பாக ஆற்றிய உரையின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

“கடந்த 2018ஆம் ஆண்டில் 30,000 பேரும் , 2022ஆம் ஆண்டில் 45,000 பேரும், இவ்வாண்டில் 59,000 பேரும் பல்கலைக்கழகங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட இருந்த போதிலும் பல்கலைக்கழகங்களில் உள்ள மனித வளம் மற்றும் பௌதீக வளங்கள் போதுமானதாக இல்லை.

இந்த எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு நடைமுறையில் 6200 விரிவுரையாளர்கள் மாத்திரமே உள்ளனர்.

இக்குறைபாட்டிற்கு வெளி விரிவுரையாளர்களை பணியமர்த்துவது அவசியமான போதிலும், அதற்கு அரசாங்கம் பணம் ஒதுக்குவதில்லை, விரிவுரையாளர்களை பணியமர்த்துவதில் பல பாரிய சம்பள முரண்பாடுகள் காணப்படுகின்றன.

நாடு தற்போதைய வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்கு அறிவை மையமாகக் கொண்ட பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட வேண்டும்,

இந்த வீழ்ச்சியிலிருந்து வெளியேற அறிவும் கல்வியும் புலனாய்வு மையமாக இருக்க வேண்டும்.

இருப்பினும் தற்போதைய அரசாங்கமானது நாட்டின் உயர் கல்வியை முற்றிலுமாக நாசப்படுத்துகிறது.” என தெரிவித்துள்ளார்.

(அ)

# ஐந்து களஞ்சியசாலைகளில் காணப்பட்ட 1 கோடி ரூபா பெறுமதியான நெல் மாயம்!

கொழும்பு, ஒக். 24

நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஐந்து களஞ்சியசாலைகளில் காணப்பட்ட சுமார் ஒரு கோடி பெறுமதியான நெல் தொகை காணாமல் போயுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த திருட்டு தொடர்பில் நெல் சந்தைப்படுத்தல் சபையின் உள்ளக ஊழியர்கள் குழுவொன்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

அதன்படி, குருநாகல் மாவட்டத்தில் உள்ள ஐந்து நெல் களஞ்சியசாலைகளில் இந்த திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், இது தொடர்பிலான முழுமையான அறிக்கையை மூன்று நாட்களுக்குள் வழங்குமாறு விவசாய அமைச்சர், நெல் சந்தைப்படுத்தல் தலைவருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான அறிக்கை கிடைத்தவுடன் முழுமையான விசாரணைக்காக இரகசியப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படும் என விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ)

# வவுனியா பிரதேச செயலகத்தினை முற்றுகையிட்டு மக்கள் போராட்டம்





வவுனியா, ஒக். 24

வேலங்குளம் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட 08 கிராமங்களை சேர்ந்த பொது மக்களினால் நேற்று வவுனியா பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற மக்கள், வவுனியா வேலங்குளம் கிராம சேவையாளரை அச்சுறுத்தியவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரியும் தங்களுக்கான நிரந்தர கிராம சேவையாளரை நியமிக்கக் கோரியும் கோசங்களை எழுப்பியதோடு பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

பிரதேச செயலக பிரதான வாயிலை மறித்து பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பொதுமக்களையும் வெளியேறவிடாமல் தடுத்து ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்ததுடன், பின்னர் பிரதேச செயலக அலுவலகத்தினுள்ளும் நுழைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களுடன் கலந்துரையாடிய வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன், எமது பிரதேச செயலக பிரிவின் கீழ் 48 கிராம சேவகர் பிரிவில் 28 கிராம சேவகர்களே உள்ளனர். இதனால் ஒரு கிராம சேவகருக்கு நிரந்தர கிராம சேவகர் பிரிவும், பதில் கடமை பிரிவும் வழங்கப்படுகிறது.

அந்த அடிப்படையில் கிராம சேவையளர் சர்வேந்திரன் பம்பைமடுவில் பதில் கடமையும் வேலங்குளம் கிராம சேவகர் பிரிவில் பதில் கடமையையும் மேற்கொண்டிருந்தார்.

மேலும் வேலங்குளம் மக்களின் விருப்பத்திற்கு அமைவாக குறித்த கிராம சேவகரை வேலங்குளம் கிராம சேவகர் பிரிவுக்கு நிரந்தரமாக நியமிக்கிறோம். அதன் பின்னர் அவருடைய கடமைக்கு யாரும் இடையூறு ஏற்படுத்தினால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதோடு அதற்கு பிரதேச செயலகம் பூரண ஆதரவை வழங்கும் என வாக்குறுதி அளித்ததன் அடிப்படையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

(அ)

# டயானா தாக்கப்பட்டாரா? ஆராயக் கூடுகின்றது குழு

கொழும்பு, ஒக். 24

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான சுஜித் சஞ்ஜய பெரேரா, ரோஹன பண்டார ஆகியோருக்கிடையே ஏற்பட்ட மோதல் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட குழு நாளை கூடவுள்ளது.

பாராளுமன்ற கட்டட தொகுதியில் குறித்த குழு கூடவுள்ளதாக பிரதிச் சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதன்போது, சம்பவம் இடம்பெற்ற இடத்திலுள்ள சி.சி.ரி.வி காணொளிகளை மையமாக கொண்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்திலுள்ள வாசிகசாலைக்கு அருகில் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான சுஜித் சஞ்ஜய பெரேரா, ரோஹன பண்டார ஆகியோருக்கிடையே மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

(அ)

# எலிக்காய்ச்சல் பரவும் வாய்ப்புக்கள் அதிகம்!

## சுகாதார திணைக்கள அதிகாரிகள் எச்சரிக்கை

மட்டக்களப்பு, ஒக். 24

**கிழக்கு மாகாணத்தில் தற்போது பெய்துவரும் அடைமழை காரணமாகவும் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் விவசாயிகள் பெரும்போக வேளாண்மைச் செய்கையின் விதைப்பு வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருப்பதனாலும் எலிக்காய்ச்சல் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளதால் விவசாயிகள் இவ்விடயத்தில் மிகவும் அவதானமாக இருக்குமாறு சுகாதார திணைக்கள அதிகாரிகள் அறிவுரை வழங்கியுள்ளனர்.**

வயல் நிலங்களில் காணப்படும் களி மற்றும் நீர் மூலமாக விவசாய நடவடிக்கைக்கைகளில் ஈடுபடும் விவசாயிகளுக்கும், குளங்களில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் மீனவர்களுக்கும் காயம் அல்லது துவாரத்தினூடாக லெப்டொஸ்பயிரா எனும் பக்டீரியா உட்புகுவதனாலேயே இந்த எலிக்காய்ச்சல் நோய் ஏற்பட ஏதுவாகவுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

எனவே,எலிக் காய்ச்சலுக்கான அறிகுறி தென்படுவோர் அருகிலுள்ள வைத்தியசாலை, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், குடும்ப சுகாதார வைத்திய நிலையம் மற்றும் விவசாய விஸ்தரிப்பு நிலையம் என்பவற்றில் அதற்கான சிகிச்சையையும், இலவச மருந்துகளையும் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

எலிகள் கழிக்கும் சிறுநீர் வயல் நிலங்களில் மற்றும் தேங்கி நிற்கும் நீர் நிலைகளில் சேர்வதனாலேயே இந்த நிலமை ஏற்படுகின்றது. (அ)

# திருக்கோயில் சிவன் அருள் அமைப்பில் கணினி சான்றிதழ் வழங்கும் வைபவம்



மட்டக்களப்பு, ஒக். 24

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு உட்பட்ட வறுமை கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களை சேர்ந்த வசதி குறைந்த மாணவர்களை தேர்ந்தெடுத்து சிவன் அருள் அமைப்பின் ஊடாக அந்த மாணவர்களின் கணினி கல்வியை மேம்படுத்துவதற்காக முனைவர் நித்தியானந்தனின் ரட்ணம் பவுண்டேசனின் பூரண அனுசரணையுடன் கணினி கல்வியில் சித்தி அடைந்த 47 மாணவர்களுக்கு 3 சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் கிழக்கு மாகாணத்தில் திருக்கோயில் பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிவன் அருள் அறநெறி மற்றும் கல்வி நிலைய புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் திருக்கோயில் பிரதேச செயலாளர் தலைமையில் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது . (அ)

# மேல்நீதிமன்ற நீதிபதிக்கு பிரியாவிடை!



மட்டக்களப்பு, ஒக். 24

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதியாக கடமையாற்றிய நீதிபதி என்.எம்.அப்துல்லா திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றம் பெற்றுச் செல்கிறார்.

இவருக்கான பிரியாவிடை நிகழ்வு நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, இடமாற்றம் பெற்றுச்செல்லும் நீதிபதி என்.எம்.அப்துல்லாவை நீதிமன்ற உத்தியோகத்தர்கள் பாராட்டி கௌரவித்து நினைவுச் சின்னம் வழங்கி வழியனுப்பி வைத்தனர்.

# பிரதேச சபை ஊழியர் மீது வீதியில் வைத்து தாக்குதல்!

## தாக்கியவரை கைது செய்யுமாறு போராட்டம்

மட்டக்களப்பு, ஒக். 24

கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபை ஊழியர் மீது நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது 32 வயதுடைய பிரதேச சபை திண்மக்கழிவு அகற்றும் ஊழியரே தாக்கப்பட்டார்.

மாவடிச்சேனை எம்.பி.சீ.எஸ். வீதியில் குறித்த நபர் திண்மக்கழிவு அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த நிலையில், அந்த வீதியிலுள்ள வர்த்தக நிலைய உரிமையாளருடன் ஏற்பட்ட முரண்பாட்டை தொடர்ந்து இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.





அப்பகுதியில் கடமை புரிந்த ஊழியர் தாக்கப்பட்டு, அவரது கையடக்கத் தொலைபேசியும் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக ஏனைய ஊழியர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து, தாக்குதலுக்குள்ளான ஊழியர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

ஊழியர் மீது தாக்குதல் மேற்கொண்ட நபரை பொலிஸார் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஏனைய ஊழியர்கள் திண்மக்கழிவு அகற்றும் இயந்திரங்களை குறித்த ஊழியர் தாக்கப்பட்ட வீதியில் நிறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இச்சம்பவம் தொடர்பில் வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)



# பொத்திக்களப்பில் ஒதுங்கியது சடலம்!

அம்பாறை, ஒக். 24

பொத்துவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பொத்திக்களப்பிலிருந்து நேற்று முன் தினம் சடலமொன்று கரையொதுங்கியுள்ளது.

பொத்துவில் வை.எம்.வீதியைச் சேர்ந்த 70 வயது மதிக்கத்தக்க முகம்மது இஸ்மாயில் உதுமாலெப்பை என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அன்னாரின் ஜனாஸா பிரேத பரிசோதனைக்காக பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# முஸ்லிம் காங்கிரஸின் கிளைகள் புனரமைப்பு

அம்பாறை, ஒக். 24

ஒலுவில் பிரதேசத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கிளைகள் புனரமைப்பு செய்வதற்கான முதற்கட்ட கூட்டம் ஒலுவில் 06ஆம் கிராமசேவகர் பிரிவில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றவூப் ஹக்கீமின் விசேட பணிப்புரையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், முஸ்லிம் காங்கிரஸின் பிரதிச் செயலாளர் மன்சூர் ஏ காதர், பிரதி தேசிய அமைப்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளர் ஏ.சி. சமால்தீன், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எல். அமானுல்லா, ஒலுவில் அமைப்பாளர் ஏ.சீ. சுபைர், ஒலுவில் மத்திய குழுவின் தலைவர் ஏ.எல். ஜெமில் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது ஒலுவில் 06 ஆம் பிரிவின் ஆலோசகர்களாக எஸ். ஆதம்பாவா, முன்னாள் தவிசாளர் ஏ.எல். அமானுல்லா, ஆசிரியர் ஏ.எச்.எம்.பஹ்மி,

ஏ.எல். ஜெமில் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதோடு,

தலைவராக ஐ. பௌஸர்,

செயலாளராக ஏ.பீ.எம். ரபீய்,

பொருளாளராக யூ.எல்.எம். றஃமான், உதவித் தலைவராக யூ.எல். ஹூசைன், உதவிச் செயலாளராக ஜே. அமீன்,

கொள்கை பரப்புச் செயலாளராக ஐ.எல். ஜெப்ரி, இளைஞர் அமைப்பாளராக ஏ.எச்.எம். குர்ஷித் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதோடு, ஏ.எல்.தௌபீக், ஏ.ஜே.ஜெப்பீர், ஏ.எம்.இக்பால், ஏ.எஸ்.நஸ்லிம், ஜே.சஜீர், யூ.எல்.ஏ.கபூர், ஐ. நஜாத், ஏ.எல்.ஆசிக், எம்.ஐ.எம். ஹனூன், ஜே.அத்தான், ஐ.எல். அலாவுதீன், ஏ.எச்.எம். றுக்ஸான் ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

# இஸ்ரேல்-ஹமாஸ் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவாருங்கள்

## பாப்பரசர் பிரான்ஸிஸ் வேண்டுகோள்

ரோம், ஒக். 24

**இஸ்ரேல் - ஹமாஸ் மோதல் தொடரும் நிலையில், பாப்பரசர் பிரான்சிஸ் மோதலை முடிவுக்கு கொண்டு வருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

**அத்துடன், காசா பகுதியில் மேலும் மனிதாபிமான உதவிகளை அனுமதிக்குமாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.**



ரோமில் இடம்பெற்ற பிராத்தனையின் பின்னர் பாப்பரசர் பிரான்சிஸ் இவ்வாறு வேண்டுகோள் விடுத்ததாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்ட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேல் - ஹமாஸ் மோதல் ஆரம்பிக்கப்பட்டது முதல் ஆயிரக்கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து இஸ்ரேல் தண்ணீர், உணவு மற்றும் மின்சார விநியோகத்தினை நிறுத்தியுள்ளதால் காசாவில் மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், காசா பகுதிக்கு முதலாவது மனிதாபிமான உதவி நேற்று முன் தினம் வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும், 2.4 மில்லியன் மக்களுக்கு 20 கொள்கலன்கள் மூலம் வழங்கப்பட்ட மனிதாபிமான உதவிகள் போதுமானதாக இல்லை என ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)




# பலஸ்தீனத்துக்கு ஆதரவு கோரி லண்டனில் பெரும் போராட்டம்

லண்டன், ஒக். 24

பலஸ்தீனத்திற்கு ஆதரவாக லண்டனில் பாரிய போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் இடையிலான மோதலைத் தொடர்ந்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

காசாவில் உடனடியாக போர் நிறுத்தம் அமுல்படுத்தப்பட வேண்டுமென கோரியே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் சுமார் 100,000 பேர் கலந்து கொண்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

'சுதந்திர பலஸ்தீனம்' எனும் சுலோகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு பலஸ்தீன ஆதரவாளர்கள் போராட்டத்தில் கலந்துகொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், பிரித்தானிய பிரதம, அமெரிக்க ஜனாதிபதி மற்றும் இஸ்ரேல் பிரதமர் ஆகியோருக்கு எதிராகவும் கோஷங்கள் எழுப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் பாதுகாப்புப் படையினரையும் நிறுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# காசா மீது தொடரும் இஸ்ரேலின் தாக்குதல்!



ஜெருசலேம், ஒக். 24

காசாவிலுள்ள பல வைத்தியசாலைகளுக்கு அருகில் கடந்த சில மணித்தியாலங்களில் வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வெடிப்புச் சம்பவங்களில் உயிரிழப்புகள் ஏற்பட்டமை தொடர்பான தகவல்கள் இதுவரையில் வெளியாகவில்லை.

காசாவின் மிகப் பெரிய வைத்தியசாலைகளான அல்-ஷிஃபா, அல்-குட்ஸ் மற்றும் இந்தோனேசிய வைத்தியசாலை என்பவற்றுக்கு அருகில் இந்த வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக சர்வதேச ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் இராணுவத்தினரால் குறித்த வைத்தியசாலைகளுக்கு அருகில் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக ஹமாஸ் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான காணொளிகளையும் ஹமாஸ் தரப்பினர் வெளியிட்டுள்ளனர். (அ)

# குடிமக்களை பாதுகாக்கவும், சர்வதேச சட்டத்தை மதிக்கவும் இஸ்ரேலை வலியுறுத்தும் பைடன், ஐரோப்பியத் தலைவர்கள்!

நியூயோர்க், ஒக். 24

அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளின் தலைவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இஸ்ரேலுக்கான தங்கள் ஆதரவையும், தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கான அதன் உரிமையையும் அடிக்கோடிட்டுக் காட்டினர்.

ஆனால் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை கடைப்பிடிக்கவும் பொதுமக்களைப் பாதுகாக்கவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூட்டிய தொலைபேசி அழைப்பிற்குப் பிறகு வெளியிடப்பட்ட ஒரு கூட்டு அறிக்கையில், தலைவர்கள் இரண்டு பணயக்கைதிகளின் விடுதலையை வரவேற்றனர் மற்றும் மீதமுள்ள அனைத்து பணயக்கைதிகளையும் உடனடியாக விடுவிக்க அழைப்பு விடுத்தனர். (அ)

# யூத ஜெப ஆலயத்தின் தலைவர் அமெரிக்காவில் குத்திக்கொலை!

நியூயோர்க், ஒக். 24

அமெரிக்காவின், மிச்சிக்கன், டெட்ராய்டில் உள்ள ஒரு யூத ஜெப ஆலயத்தின் தலைவர் அவரது வீட்டுக்கு வெளியே கத்தியால் குத்தப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இந்த தாக்குதலின் பின்னணியில், எந்த உள்நோக்கத்தையும் இதுவரை கண்டறியவில்லையென பொலிஸார் கூறினாலும், மத்திய கிழக்கில் இஸ்ரேல்-ஹமாஸ் மோதலின் பின்னணியில் அமெரிக்கா முழுவதும் அதிகரித்த அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இந்த சம்பவம் கவனம் பெற்றுள்ளது.

ஐசக் ஏக்ரீ டவுன்டவுன் ஜெப ஆலயத்தின் வாரியத் தலைவரான சமந்தா வோல்



(வயது-40) இறந்துவிட்டதாக அவரது நண்பர்கள் மற்றும் சக ஊழியர்கள் தெரிவித்தனர்.

டெட்ராய்ட் பொலிஸார் வெளியிட்ட செய்தி வெளியீட்டில், ஜோலியட் ப்ளேஸின் 1300 பிளாக்கில் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு பாதிக்கப்பட்டுள்ளதாக 911 என்ற எண்ணிற்கு சனிக்கிழமை அதிகாலையில் தகவல் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

பொலிஸார் அங்கு சென்றதும், பல கத்திக் காயங்களுடன் பாதிக்கப்பட்ட பெண்ணைக் கண்டுபிடித்ததாகவும், அவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

"எங்கள் வாரியத் தலைவரான சமந்தா வோலின் எதிர்பாராத மரணத்தை அறிந்து நாங்கள் அதிர்ச்சியும் வருத்தமும் அடைந்துள்ளோம்" என்று ஜெப ஆலயம் ஒரு பேஸ்புக் பதிவில் தெரிவித்துள்ளது. (அ)

# உணவு, தண்ணீர், எரிபொருள், மின்சாரம் இல்லாமல் தவித்து வரும் பலஸ்தீனர்கள்!

ஜெருசலேம், ஒக். 24

இஸ்ரேல் தாக்குதலால் வீடுகளிலிருந்து வெளியேறி கூடாரங்களில் தங்கி உள்ள பலஸ்தீனர்கள் உணவு, குடிதண்ணீர், எரிபொருள், மின்சாரம் இன்றி தவித்து வருகின்றனர்.

இஸ்ரேல் வான் தாக்குதலால் வடக்கு காஸாவிலிருந்து தெற்கு காஸாவுக்கு அகதிகளாக வந்த பலஸ்தீனர்கள், கான் யூனிஸ் நகரில் ஐ.நா. போன்ற தன்னார்வ நிறுவனங்கள் அமைத்த கூடாரங்களில் தங்கியுள்ளனர்.

சுமார் 35 ஆயிரம் பேர் அங்கு தங்க வைக்கப்பட்டுள்ள நிலையில், உணவு, குடிதண்ணீர், எரிபொருள், மின்சாரம், இணைய சேவைகள் போன்ற வசதிகளின்றி தவித்துவருவதாக



அவர்கள் கூறினர்.

கடந்த சனிக்கிழமை எகிப்திலிருந்து 20 லொறிகளில் நிவாரணப் பொருட்கள் வந்திறங்கிய நிலையில், தினமும் 100 லொறிகளில் நிவாரண பொருட்கள் தேவைப்படுவதாக ஐ.நா. தெரிவித்துள்ளது. (அ)

# ஜனாதிபதி தேர்தலில் ஒரு கோடி வாக்குகளைப் பெறுவார் ரணில்

## வஜிர அபேவர்தன ஆருடம்

கொழும்பு, ஒக். 24

**அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க ஒரு கோடி வாக்குகளைப் பெறுவார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்-**

இந்த நாட்டை மீட்கக்கூடிய தேசிய தலைவர் உருவாகியுள்ளார். 55 வருடகால அரசியல் அனுபவம் இருந்ததால்தான் நாடு விழுந்தபோது அதனை மீட்க முன்னிலையானார். வரிசை யுகத்தை முடிவுக்கு கொண்டு வந்தார். அனைவராலும் வீராப்பு பேச முடியும், ஆனால் செய்து காட்டும் பழக்கமே ரணில் விக்கிரமசிங்கவிடம் உள்ளது. அவர் உலகை வென்ற தலைவர்.

நாம் அனைவரும் இணைந்து செயற்பட்டால் எமது தேசிய தலைவர் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் 100 லட்சம் வாக்குக



ளைப் பெறுவார். இன்று பொய்யுரைப்பது தடை செய்யப்பட்டுள்ளது, நாட்டை மீட்கும் திட்டம் இருந்தால் அதனை பாதீட்டு காரியாலயத்தில் ஒப்படைக்கலாம்.

1952 இல் ஆராய்ச்சி மேம்பாட்டுக்காக 12 வீதம் ஒதுக்கப்படும் என இந்திய பிரதமர் நேரு அறிவித்தபோது விமர்சனங்கள் எழுந்தன, இன்று இந்தியா எந்த மட்டத்தில் உள்ளது. நிலவுக்கு கூட விண்கலம் அனுப்பும் அளவுக்கு முன்னேறியுள்ளது. நேருவிடம் தூரநோக்கு சிந்தனை இருந்தது. அதேபோல எமது தேசிய தலைவரிடம் தூரநோக்கு சிந்தனை இருக்கின்றது. ரணில் விக்கிரமசிங்க என்ற தேசிய தலைவர் இருப்பதால் எமக்கு எதிர்காலம் குறித்த அச்சம் இல்லை-என்றார். (அ)

# ஈஸ்டர் தாக்குதலின் பின்னால் இஸ்ரேல்!

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 24

நாட்டில் நடந்த ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் இஸ்ரேல் இருந்துள்ளது என்று கத்தோலிக்க பேராயார், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணைக்குழு அறிக்கையையும் ஆதாரம் காட்டி சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் இந்நாட்டின் கத்தோலிக்க சமயத் தலைவரான பேராயரை நாங்கள் சென்று சந்தித்தோம். அமைச்சர்களான பௌஸி, கபீர் ஹாஷிம்,ரிஷாஷ் பதியுதீன் ஆகியோரும் என்னுடன் வந்திருந்தனர்.

அப்போது நாங்கள் எங்களது கவலையை தெரிவித்த போது பேராயர், “ஏன் நீங்கள் இதற்காக கவலைப்படுகிறீர்கள்?



இதற்கு இந்நாட்டு முஸ்லிம்கள் பொறுப்பல்ல” எனக் கூறிவிட்டு, இது மத்திய கிழக்கு நாடொன்றின் வேலை என்றும் இஸ்ரேல் இதன் பின்னணியில் இருந்துள்ளதாக சந்தேகிப்பதாகவும் கூறினார்.

இந்த நாட்டில் முஸ்லிம்கள் மீது அப்பொழுது தாக்குதல் மேற்கொள்ளப்படாமல் தடுத்ததற்காக நாங்கள் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம் - என்றும் கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றில் உரையாற்றியபோது அவர் தெரிவித்தார். (ஐ)

# போதைப்பொருளுடன் வெளிநாட்டு பெண் கைது!

கொழும்பு, ஒக். 24

ஆங்கில சிறுவர் கதைப் புத்தகங்களின் அட்டைக்குள் மிகவும் சூட்சகமான முறையில் கொக்கெய்ன் போதைப்பொருளை இலங்கைக்கு கடத்திவந்த வெளிநாட்டுப் பெண்ணொருவர் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

இந்தோனேஷியாவைச் சேர்ந்த 42 வயதான பெண் ஒருவரே இவ்வாறு போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என சுங்கப் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட வெளிநாட்டுப் பெண் பிரஜையிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருள் இலங்கையின் பெறுமதி சுமார் இருபத்து மூன்று கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடையது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரான இந்தோனேஷியாவைச் சேர்ந்த குறித்த பெண், இலங்கைக்கு முதற் தடவையாக இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார் எனவும், அவர் அந்த நாட்டில் புடவை வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட குறித்த பெண், போதைப் பொருளுடன் முதலில் எத்தியோப்பியாவின் அடிஸ் அபாபாவிலிருந்து தனது பயணத்தைத் ஆரம்பித்து, கட்டாரின் டோஹா ஊடாக இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

கைது செய்யப்பட்ட வெளிநாட்டுப் பெண் பிரஜையினமிருந்து, மிகவும் மதிநுட்பமான முறையில் 8 ஆங்கில சிறுவர் கதை புத்தக அட்டைக்குள் மறைத்து வைத்திருந்த 04 கிலோ கொக்கெய்ன் மற்றும் 598 கிராம் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. (அ)

# கட்டுநாயக்க விபத்தில் இரு இளைஞர்கள் பலி!

கொழும்பு, ஒக். 24

கட்டுநாயக்க ஆடியம்பலம் பகுதியில் நேற்று முன் தினம் இரவு 10.45 மணியளவில் பஸ்ஸொன்றும், முச்சக்கரவண்டியும் நேருக்கு நேர் மோதியதில் முச்சக்கரவண்டியில் பயணித்த இருவர் உயிரிழந்துள்ளதாக கட்டுநாயக்க பொலிஸார் தெரிவித்தார்.

இந்த சொகுசு பஸ் எப்போதும் இணையத்தில் ஆசன முன்பதிவு செய்யப்பட்டதன் பின்னர் தெஹிவளையில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக மட்டக்களப்பு வரை இயங்கும். அவ்வாறே நேற்று முன் தினம் இரவு குறித்த பஸ் ஆடியம்பலம் பகுதியை கடந்து சென்று கொண்டிருந்தபோது முன்னால் வந்த முச்சக்கர வண்டியுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் முச்சக்கரவண்டியை ஓட்டிச் சென்ற கம்பஹாவைச் சேர்ந்த 25 வயதான சதுரங்க ஹேரத் சிறிவர்தன மற்றும் அதே வாகனத்தின் பின் இருக்கையில் பயணித்த 19 வயதான சரித் பிரியதர்ஷன ஆகியோரும் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் நீர்கொழும்பு பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பஸ்ஸின் சாரதி கட்டுநாயக்க பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் விஜேரத்னவின் பணிப்புரையின் பேரில், போக்குவரத்து பிரிவு உதவிப் பொலிஸ் பரிசோதகர் எம்.ஏ.சிசிர குமாரவின் மேற்பார்வையில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ)

# அரசாங்க ஊழியர்களுக்கு பட்ஜெட்டில் சம்பள உயர்வு?

கொழும்பு, ஒக். 24

வரவு- செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும் என தான் எதிர்பார்ப்பதாக கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் அடுத்த மாதம் முன்வைக்கப்படவுள்ளது. அதன் உள்ளடக்கம் பற்றி தெரியாது. எனினும், சம்பள உயர்வு இருக்கும் என எதிர்பார்க்கின்றேன். பாதீடு முன்வைக்கப்படும்வரை அது பற்றி உறுதியாக கூற முடியாது. இது பற்றி நிதி அமைச்சருக்குதான்



தெரியும்.

அதேவேளை, புதிய அதிபர்களுக்கான நியமனம் எதிர்வரும் நவம்பர் 04 ஆம் திகதி வழங்கி வைக்கப்படவுள்ளது எனவும்,

இதன்படி 4 ஆயிரத்து 715 அதிபர்கள் (அதிபர் தரம் III) நியமனம் பெறவுள்ளனர்-என்றார். (அ)

# இலங்கையில் அடையாளம் காணப்பட்ட புதிய நுளம்பு!

கொழும்பு, ஒக். 24

கம்பஹாவில் புதிய வகை நுளம்பு அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த புதிய வகை நுளம்பு தவளைகளின் இரத்தத்தை உறிஞ்சுவதாகவும் இவை கம்பஹா, மீரிகம பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் பூச்சியியல் துறை அதிகாரி கயான் சிறீ குமாரசிங்க தெரிவித்தார்.

2 முதல் 3 மில்லிமீற்றர் நீளமுடையதாக குறித்த வகை நுளம்பு காணப்படுவதாகவும் பூச்சியியல் துறை அதிகாரி குறிப்பிட்டார்.

இந்த புதிய வகை நுளம்புடன் இலங்கையில் மொத்தமாக 156 வகை நுளம்புகள் காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே இந்த வகை நுளம்பு 108 வருடங்களுக்கு முன்னர் தென்கொரியாவில் அடையாளம் காணப்பட்டதுடன் தொடர்ந்து தாய்லாந்திலும் அடையாளம் காணப்பட்ட நிலையில் தற்போது இலங்கையில் கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சடுதியாக குறைந்த மீன்களின் விலை!

கொழும்பு, ஒக். 24

மீன்களின் விலை தற்போது சடுதியாக குறைவடைந்து வருவதாக மீன் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது அதிகளவு மீன் வளம் கிடைத்துள்ளதே மீன்களின் விலை குறைவடையக் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில வகை மீன்களின் விலை 50 வீதத்தால் குறைந்துள்ளதாக பேலியகொடை சந்தையின் வர்த்தக சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சந்தையில் தற்போது மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சில மரக்கறிகளின் விலைகள் சடுதியாக மிக அதிகளவில் உயர்ந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

மழை காரணமாக விலை உயர்வடைந்துள்ளதாக மனிங் பொது வர்த்தக சங்கத்தின் தலைவர் எச்.எம்.உபாசேன தெரிவித்துள்ளார். (அ)

## புலிகளால்...

தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“சமூக ஊடகங்களைப் பயன்படுத்தியே ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் விரட்டியடிக்கப்பட்டனர். அதனால் தான் சமூகவலைத்தளங்களை கட்டுப்படுத்துவதற்கு அரசு முயற்சிக்கின்றது. ஆயுதமேந்தி 71, 87 மற்றும் 89 கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள், வடக்கில் ஆயுதம் ஏந்தியவர்களுக்கு ஜனாதிபதியை கொலை செய்ய முடிந்தாலும், ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாமல் போனது. ஜனாதிபதிகளை விரட்ட முடியாமல்போனது. ஜனாதிபதிகளை பதவி விலக வைக்க முடியாமல் போனது. ஆனால் ஆயுதம் ஏந்தாமல் ‘ஸ்மார்’ போன் ஊடாகவே இளை ஞர்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி னர். எனவேதான் அந்த ஸ்மார்ட் போனை மௌனிக்க வைப்பதற்கு முயற்சிக்கின்றனர்.

உலகில் டிஜிட்டல் சேவையில் வரி அறவிடாத 6 நாடுகளில் இலங்கையும் ஒன்று. சர்வதேச உடன்படிக்கையின் பிரகாரம் 15 வீத வரியை அறிவிடலாம். இதனைசெய்யாமல் வைத்தியர்கள், பொறியியலாளர்களிடம் வரி அறவிட போய் அவர்கள் நாட்டைவிட்டு செல்லும்நிலை காணப்படுகின்றது. இந்த வரியை அறிவிடலாம். அதேபோல குறித்த நிறுவனங்களுடன் (சமூக வலைத்தள) புரிந்துணர்வு உடன் படிக்கையொன்றை ஏற்படுத்தலாம். போலித்தகவல்கள் பரவுவதை தடுத்தல், வன்முறையை தூண்டுதல் போன்ற வற்றை தடுப்பதற்கு நிறுவனங்களுடன் முதலில் புரிந்துணர்வுக்கு வர வேண்டும். இதனை பொலிஸ் அமைச்சருக்கோ, ஜனாதிபதியால் நியமிக்கப்படும் குழுவுக்கோ செய்ய முடியாது. கடந்த காலங்களில் ஐசிபீர், பயங்கரவாத தடைச் சட்டம் என்பன தவறாக பயன்படுத்தப்பட்டன. எனவே, நிகழ்நிலை காப்பு சட்ட மூலத்துக்கு நாம் எதிர்ப்பு.” - என்றார்.

## பட்ஜெட்டுக்கு...

அடுத்த வருடம் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்துவது சாத்தியமில்லை என்பதற்காகவே இந்த கோரிக்கையை பொதுஜன பெரமுன முன்வைத்துள்ளது.

எவ்வாறாயினும், அடுத்த ஆண்டு மார்ச் மாதம் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால், எந்தவொரு அரசியல் கட்சியாலும் பெரும்பான்மை பெற முடியாது. கூட்டணி ஆட்சியை அமைக்கவேண்டும்.

ஜனாதிபதியிடம் சென்று புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்படும் சூழ்நிலை ஏற்படும் என்ற காரணத்தின் அடிப்படையிலேயே பொதுஜன பெரமுன பொதுத் தேர்தலை ஜனாதி பதித் தேர்தலுக்கு முன்னதாக நடத்தும் யோசனையை முன்வைத்துள்ளது.

அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலும், அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தலும் மாகாண சபைத் தேர்தலும் நடத்தப்படும் என கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் கடந் சனிக்கிழமை நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய மாநாட்டில் ஜனாதிபதி விக்ரமசிங்க தெரிவித்தார். (அ)

## அரவிந்தகுமார்...

உறுதிப்படுத்தியுள்ளார்.

ஏற்கனவே அரவிந்தகுமாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலையில் அரசாங்கத்தில் இணைந்து கல்வி இராஜாங்க அமைச்சுப் பதவியை பெற்றுக்கொண்ட ஏ.எச்.எம். பௌஸிக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் தான் அமைச்சுப் பதவியை பெற்றுக்கொள்ளவில்லை என்பதனால் தனக்கு எதிராக கட்சி நடவடிக்கை எடுக்காது என பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார். (அ)

## மாந்தை...

அதிகாரிகளுக்கு வால் பிடிக்காதே, வன இலாகா அதிகாரிகள் மாமனா மச்சானா பதில் சொல், அடக் காதே அடக்காதே மக்களை அடக்காதே போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பாண்டியன்குளம் சந்தியிலிருந்து பேரணியாக புறப்பட்ட கிராம மக்கள் பிரதேச செயலக வாசலில் நின்றவாறு கோசங்களை எழுப்பினர்.

கடந்த 2014ஆம் ஆண்டு மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தால் துவரங்குளம் வயல் காணிக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை உறுதிப்படுத்தி (முதல் பிரதியை) எமக்குத் தாருங்கள் எனவும் இதுவரை காலமும் பிரதேச செயலகத்தால் அனுமதிகள் மறுக்கப்பட்டு வருவதாகவும், மாகாண காணி ஆணையாளர் வழங்குமாறு தெரிவித்தும் பிரதேச செயலகம் வழங்க முன்வரவில்லை எனவும் தெரிவித்தவாறே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த பகுதியில் வசிக்கும் 58 விவசாயிகளுக்கு பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட காணிக்கான உறுதியை வழங்குமாறு கேட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிவமோகன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன், மாந்தை கிழக்கு பிரதேச சபை முன்னால் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் உதவி பிரதேச செயலாளரிடம் மகஜரும் பிரதேச மக்களால் கையளிக்கப்பட்டது. இதேவேளை இது தொடர்ப்பில் உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று பிரச்சினைக்கான தீர்வினை பெற்று தருவதாக கூறியதை அடுத்து மக்கள் கலைந்து சென்றனர். (அ)

## தமிழ்...

இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் முகமூடி அணிந்து வந்த இருவர், கூரிய ஆயுதத்தால் அவரைச் சரமாரியாக வெட்டிவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

இரத்த வெள்ளத்தில் கிடந்த அவரை அயலவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதிலும் அவர் உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொடுக்கல் - வாங்கல் விவகாரமே இந்தக் கொலைக்குக் காரணம் என ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதையடுத்துக் கொலையாளிகளைத் தேடும் நடவடிக்கையில் பொலிஸார் களமிறங்கியுள்ளனர். (அ)

## சு.க.வுக்கு...

மனஸ்தாபம் ஒன்று இருக்கின்றது. அது தொடர்பில் நாங்கள் ஜனாதிபதிக்கு அறிவித்தோம்.

ஜனாதிபதி இந்த நாட்டை நடத்திச் செல்வதற்கான பலத்தை பொதுஜன பெரமுன கட்சியே வழங்குகின்றது.

பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர்களே அதிக ஆதரவை வழங்குகின்றனர். அனாலும் ஐந்து அமைச்சர்களே அமைச்சுப் பதவிகளில் இருக்கின்றார்கள்.

அதிலும் ஒன்றை சுதந்திரக் கட்சிக்கு வழங்கி இராஜாங்க அமைச்சுப் பதவி ஒன்றையும் சுதந்திர கட்சிக்கு வழங்கியுள்ளமை குறித்து நாங்கள் சந்தோசப்படமாட்டோம்.

அது பிழையான விடயம். பிழையானதை பிழை என்று கூற நாங்கள் பயப்படமாட்டோம்.

இது தொடர்பில் எமது கட்சி என்ற ரீதியில் நாங்கள் கடும் எதிர்ப்பை தெரிவிக்கின்றோம் - என்றார். (அ)

## நாட்டின் பல பகுதிகளுக்கு வெள்ள அபாயம் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 24

நாட்டின் பல பகுதிகளுக்கு எதிர்வரும் மூன்று முதல் 24 மணித்தியாலங்க ளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கையை நீர்ப்பாசன திணைக்களம் விடுத்துள்ளது.

நில்வளா ஆற்றின் மேல் மற்றும் மத்திய பகுதிகளில் கணிசமான மழை பெய்து வருவதால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, கொட்டாபொல, பிடபெத்தர, பஸ்கொட, அக்குரஸ்ஸ, அத்துரலிய, மாலிம்பட, திஹாகொட, மாத்தறை மற்றும் தெவிநுவர பிரதேச செயலாளர் பிரிவுகளில் நில்வளா கங்கை கசிவுப் பாதைக்கு உட்பட்ட தாழ்வான பகுதிகளில் இந்த எச்சரிக்கை அறிவிப்பு அமுலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பிரதேசங்களில் கணிசமான அளவு வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடும் எனவும், மக்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் நீர்ப்பாசன திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

## அமைச்சரவை...

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மின் கட்டணத்தை 100 வீதத்தாலும் 200 வீதத்தாலும் அதிகரித்து பழைய கோபதாபங்களை பழிதீர்க்கவா ஜனாதிபதி ரணில் அரசாங்கம் இவ்வாறு செயற்படுகின்றது?.

மின் கட்டண அதிகரிப்பால் பண்ட மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரிக்கும்.

மக்கள் இதற்கு எதிராக வீதிக்கு இறங்கும் போது பல்வேறு சட்டங்களை அறிமுகப்படுத்தி மக்களை ஒடுக்க முற்படுகின்றனர்.

ஆனால், அரசாங்கமே சுகபோகங்கள், சலுகைகளை அதிகரித்து கொண்டும், அமைச்சுப் பதவிகளை மாற்றிக் கொண்டும் மக்களை கண்டுகொள்ளாது செயல்படுகிறது.

இன்று அமைச்சரவை மாற்ற மொன்று இடம்பெற்றது. இதனால் பிரச்சினைகள் தீருமா? இல்லை. அமைச்சுக்களையும், அமைச்சர்களையும் மாற்றி பிரச்சினைகளை மூடி மறைக்க முற்படுகின்றனர்.

சுகாதார அமைச்சில் நிகழ்ந்த முறைகேடுகள், ஊழல்கள் குறித்தும் தரம் குறைந்த மருந்துகள் குறித்தும் முழு நாடுமே கதைத்தது. சுகாதார அமைச்சரை மாற்றினால் பிரச்சினை தீர்ந்து விடுமா?.

அமைச்சரவையில் நபர்களை மாற்றி தற்போதுள்ள பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்வைத்து விவாதம் நடக்கும் போது சுகாதார அமைச்சருக்கு பக்க பலத்தை காட்டும் முகமாக ஜனாதிபதி சபா பீடத்தில் இருந்தார்.

அன்று பாதுகாத்து இன்று மாற்றியுள்ளார். ஆனால் அவர் செய்த ஊழல் மோசடிகளை மூடி மறைக்க இடமளியோம்.

அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி கூறுகிறார். அவர் என்ன தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரா?.

இந்நாட்டு சட்ட திட்டங்களுக்கு ஏற்ப தேர்தல்கள் திணைக்களம் செயற்படும். ஜனாதிபதியின் தேவைக்கேற்ப ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டிய அவசியமொன்றும் இங்கில்லை. அடுத்த வருடம் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தலை நடத்தியே ஆக வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலை பிற்போட வேண்டிய தேவை இல்லை. அது நேரத்துக்கு நடக்கும், கள்ளத்தனமாக பிற்போட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு நாம் கோறுகிறோம்.

அரசிலயமைப்பு மீறி நிதி ஒதுக்கீட்டை வழங்காது உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இடைநிறுத்தி யுள்ளனர்.- என்றார். (அ)

## மண்மேடு சரிந்து விழுந்து பாடசாலை மாணவன் பலி!

கொழும்பு, ஒக். 24

மாத்தறை-கொலொன்ன தடயம் கந்த பிரதேசத்தில் நேற்று முன் தினம் இரவு வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்து விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் தொரபனே பாடசாலையில் கல்வி பயிலும் 17 வயதுடைய உயர்தர மாணவர் ஒருவர் உயிரிழந்தார்.

மண் மேடு சரிந்துள்ளமையால் அப் பகுதிக்கு உடனே செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவனின் சடலம் ஓமல்பே வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

## கெஹலிய...

சுற்றாடல் அமைச்சராக கெஹலிய ரம்புக்வெல நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் வைத்து நேற்று இந்த நியமனம் வழங்கப்பட்டது.

விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சராக மஹிந்த அமரவீரவும், சுற்றாடல் அமைச்சராக கெஹலிய ரம்புக்வெலவும் நியமிக்கப்பட்டனர்.

இந்நிலையில் ரமேஷ் பத்திரனவுக்கு கைத்தொழில் அமைச்சுப் பதவிக்கு மேலதிகமாக சுகாதார அமைச்சுப் பதவிவுக்யும் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ரஞ்சித் சியம் பலா பிட்டியவுக்கு நிதி இராஜாங்க அமைச்சுக்கு மேலதிகமாக தோட்டத் தொழில் முயற்சிகள் அமைச்சரவை அல்லாத அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த நியமனம் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவினால் நேறறு முற்பகல் வழங்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று திடீரென மேற்கொண்ட இந்த அமைச்சரவை மாற்றத்தினால் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் பரபரப்படைந்தன.

எந்தவித ஆலோசனையும் இல்லாமல் - பெரமுனவுடன் கூடி ஆராயாமல் ஜனா திபதி மேற்கொண்ட இந்த அதிரடி நடவடிக்கையால் அரசில் பெரும்பான்மையாகவுள்ள பெரமுனவின் எம்.பிக்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர் எனக் கூறப்பட்டது. (அ)

## இராணுவ...

இராணுவ நடவடிக் கைகளுக்கான தேவை எழும்போது சீனா இரா ணுவம் பயன்படுத்தக் கூடிய தளங்களை உருவாக்குவது குறித்தே சீனா கவனம் செலுத்து கின்றது.

சீனா இராணுவத் தளபாட விநியோகத்துக்கான தளங்களை ஏற்படுத்துவது குறித்து ஆராயும் நாடுகளில் நான்கு நாடுகள் இந்தியாவின் நெருங்கிய அயல் நாடுகளாகும். பங்களாதேஷ், இலங்கை, மியன்மார், பாகிஸ்தான் ஆகிய நாடுகளே இவை என பென்டகன் தெரிவித்துள்ளது.

ஏனைய மூன்று நாடுகளும் தென் கிழக்காசிய நாடுகள். தாய்லாந்து ,சிங்கப்பூர், இந்தோனேசியா என 2023 இல் சீனாவில் இராணுவம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற அமெரிக்காவின் காங்கிரஸிற்கான அமெரிக்காவின் பாதுகாப்பு வருடாந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

தொலைதூரங்களில் தனது இராணுவவலிமையை வெளிப்படுத்துவதற்கு உதவும் விதத்தில் சீனா தனது வெளிநாட்டு உட்கட்டமைப்பு மற்றும் விநியோக வசதிகளை விஸ்தரிக்க முயல்கின்றது என தெரிவித்துள்ள பென்டகன், சீனாவின் இந்த நடவடிக்கைகள் அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகளை குழப்பலாம் எனவும் குறிப்பிட்டுள்ளது.

ஈழநாடு
Eelanadu

# செப்ரெம்பர் மாதம் பணவீக்கம் வீழ்ச்சி!

கொழும்பு, ஒக். 24

தேசிய நுகர்வோர் விலை சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம் கடந்த செப்ரெம்பர் மாதத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது.

தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கடந்த ஒகஸ்ட் மாதத்தில் 2.1 சதவீதமாக இருந்த தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம் செப்ரெம்பர் மாதத்தில் 0.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அதேநேரம், உணவு பணவீக்கமானது கடந்த ஒகஸ்ட் மாதத்தில் மறை 5.4 சதவீமாக காணப்பட்ட நிலையில், செப்டம்பர் மாதத்தில் மறை 5.2 சதவீமாக அதிகரித்துள்ளது.

அத்துடன், உணவல்லாப் பணவீக்கம் கடந்த ஒகஸ்ட் மாதம் 9 சதவீதமாக காணப்பட்ட நிலையில், செப்ரெம்பர் மாதத்தில் 5.9 சதவீதமாக பதிவாகியுள்ளது. (அ)

# கெஹலியவின் பதவியை பறித்தமை மகிழ்ச்சியே!

## கூறுகின்றார் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில



கொழும்பு, ஒக். 24

**கெஹலிய ரம்புக்வெல அமைச்சுப் பதவியை வகிக்க முடியாது என ஜனாதிபதி தீர்மானித்ததையிட்டு மகிழ்ச்சி அடைவதாக பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**

**கொழும்பில் இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிராக வாக்களித்து பாராளுமன்றத்தில் இருப்பவர்கள் அவரைப் பாது காக்க நடவடிக்கை எடுத்தார்கள்.

நம்பிக்கையில்லா பிரேரணை தீர்மானத்தில் ஆளும் கட்சியினர் நடந்துகொண்டது பிழை, எதிர்க்கட்சி நடந்துகொண்டது சரி என்று ஜனாதிபதி இன்று தீர்மானித்திருக்கின்றார்.

அமைச்சருக்கு தொடர்ந்தும் இந்த அமைச்சுப் பதவியை வகிக்க முடியாது என்று ஜனாதிபதி தீர்மானித்ததையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

இங்கு நெருக்கடியாக இருக்கும் மிகப்பெரிய விடயம் ஊழல் மோசடி. ஆகவே அமைச்சர் ரமேஸ் பத்திரன இந்த திருடர்களுடன் போராடி ஜெயிக்கவேண்டும்.

இது இலகுவான காரியம் அல்ல. இந்த விடயத்தை மாற்றுவது என்பது இலகுவான விடயம் அல்ல - என்றார்.

## ‘மனித கடத்தல் வழக்கு’;

# இலங்கையில் இருந்து தப்பியவர் தமிழகத்தில் வைத்து கைதானார்

சென்னை, ஒக். 24

இலங்கையில் மனித கடத்தல் தொடர்பிலான பல வழக்குகளில் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள 39 வயதான முகமது இம்ரான் கான் அல்லது ஹாஜா நஜர்பீடன் எனப்படுபவர், இந்தியாவில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்திய தேசிய புலனாய்வு அமைப்பின் பெங்களூர் பிரிவினர் தொடர்ந்து இவரை கண்காணித்துவந்த பின் புலத்திலேயே நேற்று முன்தினம் தமிழகத்தில் கைதுசெய்துள்ளனர்.

39 வயதான முகமது இம்ரான் கான் அல்லது ஹாஜா நஜர்பீடன் 2021ஆம் ஆண்டு ஜூன் மாதம் இலங்கையை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

தமிழ்நாட்டின் தேனி மாவட்டத்தில் உள்ள ஒரு ஊரில் இவர் தலைமறைவாக வாழ்ந்துவந்த நிலையிலேயே நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெங்களூரில் தேசிய புலனாய்வு பிரிவு பல மாதங்களாக ஹாஜா நஜர்பீடனின் நடமாட்டத்தை கண்காணித்து வந்துள்ளது.

சர்வதேச மனித கடத்தல் சம்பந்தப்பட்ட விடயங்களில் இவர் ஈடுபட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக இந்திய தேசிய புலனாய்வு அமைப்பு கூறியுள்ளது.

இவர் தமிழகத்தின் இராமநாதபுரத்திலும் பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்துள்ளார்.

இலங்கை பிரஜைகள் குழுவொன்று இந்தியா வந்து, உரிய ஆவணங்களின்றி கர்நாடகாவின் மங்களூரில் வசித்து வருவதை பொலிஸார் கண்டறிந்த பின்னரே இவர்களது பின்புலத்தில் உள்ளவர்கள் தொடர்பிலான விசாரணைகளை இந்திய தேசிய புலனாய்வுப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர்.

2022ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் மங்களூரில் 38 இலங்கை பிரஜைகளை இதுவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இலங்கையில் இருந்து தப்பிச்செல்லும் குற்றவாளிகள் தமிழ்நாடு வழியாக பெங்களூர் சென்று அங்கிருந்து மங்களூருக்கு செல்வதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், கைதுசெய்யப்பட்டுள்ள மனித கடத்தல்காரர் ஹாஜா நஜர்பீடனிடம் இந்திய தேசிய புலனாய்வு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளனர். (அ)

# 3 மாதங்களுக்கு ஒரு முறை மின்சார கட்டண திருத்தம்?

கொழும்பு, ஒக். 24

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் அமைச்சரவை பத்திரம் ஒன்று அடுத்த வாரம் அமைச்சரவையில் தாக்கல் செய்யப்படும் என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அத்துடன் 6 மாதங்களுக்கு ஒருமுறை இடம்பெறும் மின் கட்டண திருத்தத்தை 3 மாதங்களுக்கு ஒரு முறை திருத்தும் வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் புதிய மின்சாரத்துறை சட்டமூலம் இந்த ஆண்டு இறுதிக்குள் பாராளுமன்றில் முன்வைக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, 6 மாதங்களுக்கு ஒருமுறை இடம்பெறும் மின் கட்டண திருத்தத்தை 3 மாதங்களுக்கு ஒரு முறை திருத்துவதற்கான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதாகவும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர சுட்டிக்காட்டினார். (அ)

# பிரிட்டனுக்கான தூதுவராக ரோஹித போகொல்லாகம?



கொழும்பு, ஒக். 24

பிரிட்டனுக்கான இலங்கையின் அடுத்த தூதுவராக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம நியமிக்கப்படவுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவரை ஏற்றுக்கொள்வதில் பிரித்தானிய அரசாங்கம், நீண்ட கால தாமதத்தை ஏற்படுத்திய நிலையிலேயே தற்போது அதற்கான ஒப்புதல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசிய கட்சியில் அமைச்சராக இருந்த அவர், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் நிர்வாகங்களில் கிழக்கு மாகாண ஆளுநராக பணியாற்றினார்.

இந்த நிலையில், பிரிட்டன் தூதுவராக அவர் எதிர்வரும் நவம்பர் மாதம் நடுப்பகுதியில் பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# எம்.பிக்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு தீர்மானம்?

## அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஒக். 24

பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை நிர்ணயம் செய்வதற்கும், அவர்களின் சிறப்புரிமைகளை நிர்ணயம் செய்வதற்கும், ஒழுக்கமீறல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தனியான அதிகார சபையொன்றை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரமொன்று நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

இந்த அதிகார சபை ஓய்வுபெற்ற நீதிபதிகள் குழுவைக் கொண்டதாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

8 கோடி ரூபா பெறுமதியான தங்கத்தை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவந்த பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரிக்கு அபராதம் விதிக்கப்பட்ட சம்பவத்தின் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களது சிறப்புரிமையை மறுசீரமைப்பது உட்பட பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இதன் பிரகாரம் பல்வேறு கொள்கைகளை வகுக்கும் நோக்கில் இந்த அதிகார சபையை அமைப்பது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பிலான பிரேரணையும் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# முகமது சமி புதிய சாதனை



தர்மசாலா, ஒக். 24

உலகக் கிண்ணத்தில் இந்திய அணிக்காக அதிக முறை 5 விக்கெட்களை வீழ்த்திய வீரர் என்ற சாதனையை இந்திய அணியின் வேகப் பந்துவீச்சாளர் முகமது ஷமி படைத்துள்ளார்.

உலகக் கிண்ணத்தின் நேற்று முன்தினம் போட்டியில் இந்தியா - நியூசிலாந்து அணிகள் விளையாடி வருகின்றன. இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி பந்துவீச்சைத் தேர்வு செய்ய நியூசிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணி 273 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இந்தியா தரப்பில் சிறப்பாக பந்துவீசிய முகமது ஷமி 5 விக்கெட்களை கைப்பற்றி அசத்தினார். இதன்மூலம், உலகக் கிண்ணத்தில் இந்திய அணிக்காக அதிக முறை 5 விக்கெட்களை கைப்பற்றிய வீரர் என்ற சாதனையையும் படைத்துள்ளார். அவர் இந்திய அணிக்காக உலகக் கிண்ணத்தில் இதுவரை 2 முறை 5 விக்கெட்களை கைப்பற்றியுள்ளார்.

இந்திய அணியின் முன்னாள் வீரர்களான கபில் தேவ், வெங்கடேஷ் பிரசாத், ரொபின் சிங், அஷிஷ் நெஹ்ரா மற்றும் யுவராஜ் சிங் ஆகியோர் உலகக் கிண்ணத்தில் இந்திய அணிக்காக தலா ஒரு முறை 5 விக்கெட்களை கைப்பற்றியுள்ளனர்.

# அதிவிரைவாக 2,000 ஓட்டம்!




தர்மசாலா, ஒக். 24

ஒருநாள் போட்டிகளில் அதிவேகமாக 2 ஆயிரம் ஓட்டங்களை கடந்த வீரர் என்ற சாதனையை இந்திய அணியின் இளம் வீரர்களில் ஒருவரான ஷூப்மன் கில் படைத்துள்ளார்.

உலகக் கிண்ணத்தில் இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகள் விளையாடிய போட்டியிலேயே அவர் இந்த சாதனையைப் படைத்தார். அவர் வெறும் 38 இன்னிங்ஸ்களில் 2 ஆயிரம் ஓட்டங்களை கடந்து அசத்தியுள்ளார். இதற்கு முன்னதாக தென்னாபிரிக்க அணியின் ஹசிம் ஆம்லா இந்த சாதனையை தன்வசம் வைத்திருந்தார். அவர் 40 இன்னிங்ஸ்களில் 2 ஆயிரம் ஓட்டங்களை கடந்தார்.

ஒருநாள் போட்டிகளில் அதிவேகமாக 2 ஆயிரம் ஓட்டங்களை கடந்தவர்கள்,

ஷூப்மன் கில் - 38 போட்டிகளில்
ஹசிம் ஆம்லா - 40 போட்டிகளில்
ஜாகிர் அப்பாஸ் - 45 போட்டிகளில்
கெவின் பீற்றர்சன் - 45 போட்டிகளில்
பாபர் அஸாம் - 45 போட்டிகளில்
ராஸி வாண்டர் துசென் - 45 போட்டிகளில்



# கோலி அதிரடி ஆட்டம் இந்திய அணி வெற்றி!

தர்மசாலா, ஒக். 24

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி யில் நியூஸலாந்து அணியை 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வீழ்த்தியது.

இந்தப் போட்டி இமாச்சல பிரதேசத்திலுள்ள தர்மசாலா மைதானத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா, நியூஸலாந்து அணியை துடுப்பெடுத்தாட அழைத்தார்.

நியூஸிலாந்து அணியில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. தொடக்க ஆட்டக்காரர்களாக டெவன் கொன்வேயும், வில் யங்கும் களமிறங்கினர். டெவன் கொன்வே ஓட்டக் கணக்கை தொடங்காமலேயே, முகமது சிராஜ் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். வில் யங் 27 பந்துகளில் 17 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஷமி பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இதனால் அந்த அணி 2 விக்கெட் இழப்புக்கு 19 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்தது.

இதையடுத்து 3ஈவது விக்கெட்டுக்காக இணைந்த ரச்சின் ரவீந்திரா, டெரில் மிட்செல் ஆகியோர் சிறப்பாக விளையாடி ஓட்டத்தை வெகுவாக உயர்த்தினர். இருவரும் சிறப்பான இணைப்பாட்டத்தைக் கட்டமைத்து இந்திய பந்துவீச்சாளர்களின் பந்துகளை சிதறடித்தனர்.

குறிப்பாக குல்தீப் யாதவ் பந்துகளை சிக்ஸருக்கும், பௌண்ட்ரிக்கும் விரட்டினர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 178ஆக இருந்தபோது இந்த இணை பிரிந்தது. 87 பந்துகளில் 75 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் ஷமி பந்தில், ஷூப்மன் கில்லிடம் பிடி கொடுத்து ரச்சின் ரவீந்திரா ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் வந்த அணித் தலைவர் ரொம் லதாம் 5 ரன்களில் குல்தீப் பந்தில் வீழ்ந்தார். சிறிதுநேரம் களத்தில் நீடித்த கிளென் பிலிப்ஸ் 23 ஓட்டங்களில் குல்தீப் யாதவ் பந்தில் ஆட்டமிழந்தார். சாப்மேனை 6 ஓட்டங்ளில் வெளியேற்றினார் ஜஸ்பிரீத் பும்ரா. மிட்செல் சான்ட்னர் ஓர் ஓட்டத்திலும் மேட் ஹென்றி ஓட்டம் எடுக்காமலும் மொகமது ஷமி பந்தில் ஆட்டமிழந்தனர்.

ஆனால், மறுபுறம் டரில் மிட்செல் நிலைத்து ஆடி சதம் விளாசினார். அவர் 127 பந்துகளில் 130 ஓட்டங்கள் விளாசிய நிலையில் ஷமி பந்தில் ஆட்டமிழந்தார். ஆட்டத்தின் கடைசி பந்தில் லக்கி பெர்குசன் ரன் - அவுட்டா னார். 50 ஓவர்களில் அந்த அணி 273 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இந்திய அணி தரப்பில் மொகமது ஷமி 54 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்களை சாய்த்தார்.

இதன்மூலம் உலகக் கிண்ணப் போட்டிகளில் 2 முறை 5 விக்கெட்களை வீழ்த்திய முதல் இந்திய வீரர் என்ற சாதனையை ஷமி செய்துள்ளார். இந்த ஆட்டத்தில் குல்தீப் யாதவ் 2 விக்கெட்களையும், பும்ரா, சிராஜ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதையடுத்து 274 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி விளையாடத் தொடங்கியது. விராட் கோலி, ரோஹித்தின் அபார ஆட்டத்தால் இந்திய அணி 48 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 274 ஓட்டங்கள் எடுத்து வெற்றி கண்டது. ரோஹித் 46, ஷூப்மன் 26, ஸ்ரேயஸ் 33, விராட் கோலி 95, கே. எல். ராகுல் 27, சூர்யகுமார் யாதவ் 2 ஓட்டங்கள் சேர்த்தனர். ஜடேஜா 39, மொகமது ஷமி ஓர் ஓட்டம் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். இதையடுத்து இந்திய அணி 10 புள்ளிகளுடன் புள்ளிகள் பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறியது.

# பிசன்சிங் பேடி காலமானார்!





புதுடில்லி, ஒக். 24

இந்தியாவின் சுழல்பந்து ஜாம்பவான் பிசன்சிங் பேடி 77 வயதில் காலமானார்.

உலகின் தலைசிறந்த இடதுகை சுழல்பந்து வீச்சாளர் என கருதப்பட்ட பிசன்சிங் பேடி 1967 முதல் 1979 வரை இந்திய அணிக்காக 67 டெஸ்ட் போட்டிகள் 10 ஒருநாள் போட்டிகளில் விளையாடியிருந்தார்.

டெஸ்ட் போட்டிகளில் பிசன் சிங் பேடி 266 விக்கெட்களை வீழ்த்தியிருந்தார்- 14 தடவை ஐந்து விக்கெட்களை கைப்பற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியா - நியூசிலாந்து போட்டி ஹொட் ஸ்ராரில் புதிய சாதனை

புதுடில்லி, ஒக். 24

இந்தியா - நியூசிலாந்து இடையிலான உலகக் கோப்பை போட்டியை ஹொட் ஸ்ராரில் ஒரே நேரத்தில் 4.3 கோடி பார்வையாளர்கள் கண்டு மகிழ்ந்துள்ளனர்.

உலகக் கிண்ணத்தில் ஞாயிற்றுக்கிழமை நடந்த போட்டியில் இந்தியா - நியூசிலாந்து அணிகள் விளையாடின. இதில் இந்தியா வெற்றி பெற்றது.

இந்த நிலையில், இந்தப் போட்டியில் இந்தியா- நியூசிலாந்து இடையிலான உலகக் கோப்பை போட்டி, ஹொட் ஸ்ராரில் ஒரே நேரத்தில் 4.3 கோடி பார்வையாளர்களை பெற்று டிஜிற்றல் ஸ்ட்ரீமிங்கில் இதுவரை இல்லாத புதிய உச்சத்தை எட்டியுள்ளது.

இதற்கு முன்பாக, இந்தியா - பாகிஸ்தான் போட்டி, ஒரே நேரத்தில் 3.5 கோடி பார்வையாளர்களை பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# எங்கிருந்து குண்டு வரும்? எங்கிருந்து தூக்கம் வரும்?

## காசாவில் இருந்து பெண் பத்திரிகையாளரின் அனுபவம்!



**பாலஸ்தீன பத்திரிகையாளர் மராம் ஹுமெய்ட்**

இந்த யுத்தத்தின் போது இங்கே ஒவ்வொருவரின் வாழ்க்கையும் கணிக்க முடியாததாகவும் சவாலாகவும் இருக்கிறது. இந்தக் கட்டுரையை எழுத நான் உட்காரும் போதெல்லாம் காதுகளில் ஏவுகணையின் நாராசமான பேரிரைச்சல்களே கேட்கின்றன.

நன்கு அறிந்த தெரிந்தவர்களின் மரணச் செய்திகள், நமது பகுதிக்கு அருகே குண்டு விழுந்துவிட்டது என்ற செய்திகள், தண்ணீர் இல்லை என்றும் உணவு இல்லை என்றும், இணையம் இல்லை என்றும் தினம் தினம் காசா நகரில் நடக்கும் அவலப் போராட்டங்களைப் பற்றிய செய்திகள் எனக்கு வந்துகொண்டே இருக்கின்றன.

**என்னோடு வந்த கணவர், சகோதரர்!**

நேற்று நாங்கள் டெய்ர் எல்-பாலாவுக்கு (இது மத்திய காசா பகுதியில் உள்ள ஒரு நகரம்) இடம்பெயர்ந்தோம். இங்கே வந்த பிறகு , நிலைமை எவ்வாறு இருக்கிறது என்பதை அறிவதற்காகவும் இடம்பெயர்ந்தவர்களின் நிலைமைகள் குறித்த தகவல்களைச் சேகரிப்பதற்கும் முதல் முறையாக வெளியே சென்றேன்.

தொடர்ச்சியான வான்வழித் தாக்குதல்களால், உள்ளார்ந்த அபாயங்களை நான் அறிந்திருந்தேன். நான் ஒரு பத்திரிகையாளராக கிளம்பிய நிலையில், என் கணவர் மற்றும் என் சகோதரர் இருவரும் என்னுடன் சேர்ந்து, 'நாங்களும் உன்னுடன் வருகிறோம். அப்படியே குடும்பத்துக்கு தேவையான மளிகை சாமான்களை வாங்கிக் கொண்டு வருகிறோம்' என்றனர். இந்த நேரத்தில் என்னை தனியாக விட அவர்களுக்கு உண்மையில் மனமில்லை.








நாங்கள் புறப்படத் தயாரானபோது, பல எண்ணங்கள் என் மனதில் ஓடின. வீட்டில் இருக்கும் நம் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டுமே, வெளியே மற்றவர்களுக்கு ஏதாவது நேர்ந்தால் அவர்களுடன் இருக்க வேண்டுமே என்ற எண்ணத்தை என்னால் அசைக்க முடியவில்லை.

“ரெடியா மராம்?” என்று எனக்காக காத்திருந்த என் கணவர் அழைத்தார். பாதுகாப்பான விருப்பமாகத் தோன்றியதாலும், சாலைகளில் போக்குவரத்து குறைவாக இருந்ததாலும் நாங்கள் எங்கள் பயணத்தைத் தொடங்கினோம்.

அடுத்த தெருவுக்குத் திரும்பியபோது, ஒரு பெரிய வெடிப்பு அப்பகுதியை உலுக்கியது, என் மனம் அச்சத்தால் நிரம்பி வழிந்தது. வீட்டை விட்டு வெளியேறுவதற்கு முன்பு நான் கொண்டிருந்த கவலைகள் மீண்டும் விரைந்து வந்தன. அப்போது வீட்டில் இருந்து எங்கள் குடும்பத்தினர் உடனடியாக எனக்கு போன் செய்து, ‘ஒரே சத்தமா இருக்கு,.. சீக்கிரம் திரும்பி வாங்க’ என்று கண்டிப்போடு வற்புறுத்தினார்கள்,

**கண் முன் கரும்புகை, கடைவீதி எங்கும் பதற்றம்!**

எங்களுக்கு சற்று தொலைவு முன்னால் வானில் கரும்புகை எழுந்துகொண்டிருந்ததைப் பார்த்து நாங்கள் அப்படியே நின்றோம். அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்காக மக்கள் கூட்டம் கூட்டமாக அங்கேயும் இங்கேயும் ஓடிக் கொண்டிருந்தார்கள். தரை முதல் வானம் வரை அங்கே பதற்றம் காற்றில் பரவியது.

எல்லா கடைகளிலும் கூட்டம்.. கடைகளின் விற்பனையாளர்களும் திணறிக் கொண்டிருந்தனர். ஒரு சூப்பர் மார்க்கெட்டில் அதன் உரிமையாளர் ஸ்டாக் எவ்வளவு இருக்கிறது என்று சத்தமான குரலில் உள்ளே இருக்கும் பணியாளர்களிடம் கேட்டு அதை குறிப்புகளாக எழுதிக் கொண்டிருந்தார்.



ஆண்கள், பெண்கள், குழந்தைகள், கடை உரிமையாளர்கள், விற்பனையாளர்கள் எல்லாரும் பதற்றத்திலும் அவசரத்திலும் இருக்கிறார்கள். இந்த நேரத்தில் பத்திரிகையாளராக அவர்களுடன் பேசுவதே எனக்கு சவாலாக இருந்தது. அவர்களுக்கு இப்போது செய்தி கொடுப்பதற்கு நேரம் இல்லை, ஒரு வேளை உயிரோடு இருந்தால் அடுத்த வேளைக்கு பசிக்குமே என்பதற்கான தேடல்களில் இருக்கிறார்கள். அவர்களிடம் போய் என்ன பேசுவது? செய்தி சேகரிப்பது? என்று எனக்குள் கேள்விகள் எழுந்தன.

**நானும் இடம்பெயர்ந்தவள்தான்!**

அந்த நேரத்தில்தான் அந்த தாய் என் கண்ணில் பட்டார். தனது குழந்தைகளை கைகளுக்கும் தன் இடுப்புக்கும் இடையே வாரியணைத்துக் கொண்டு வேகவேகமாக கடைக்கு சென்று கொண்டிருந்தாள். எனக்கு என்னமோ தோன்றியது. இவருடன் பேசிப் பார்ப்போம் என்று.

நான் அவரை அணுகி, ‘ஏம்மா, நீங்கள் இதே ஏரியாவா? (டெய்ர் எல்-பாலா) அல்லது வேற இடத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்திருக்கீங்களா?’ என்று கேட்டேன். என்னைப் பார்த்து என்ன நினைத்தாரோ, சோகமாக ஒரு புன்னகை சிந்தி, ‘உயிருக்கு பயந்து இடம் பெயர்ந்துதான் வந்திருக்கோம்” என்றார். சட்டென என்னையும் அறியாமல் என் கை அந்த பெண்ணின் கையை பிடித்துக் கொண்டது.

‘நானும் அப்படிதான் வந்திருக்கேன்” என்று சொல்லி விட்டேன். ஒரு பத்திரிகையாளர் என்ற அறிமுகத்தை விட உயிருக்காக, வாழ்க்கைக்காக இடம் விட்டு இடம் ஓடிவந்தவள்தான் நானும் என்ற அறிமுகமே அந்த இடத்தில் அந்த தாய்க்கும் எனக்கும் ஒற்றுமையான ஆறுதலாக இருந்தது.



**உயிரைக் கையில் பிடித்தபடி ஓடுகிறோம்!**

எனது பயணம் முழுவதும், இதுபோன்ற கதைகளுடன் பலரை நான் சந்தித்தேன். சிலர் பகிர்ந்து கொள்ள தயங்கினார்கள், மற்றவர்கள் தங்கள் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் கண்ணீரோடும் கோபத்தோடும் வெளிப்படுத்தினார்கள். இந்த உயிரை விட்டுவிடக் கூடாது, நம் குழந்தைகளை விட்டுவிடக் கூடாது என்ற துடிப்பில் அவர்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தனர்.

அப்படியே நடந்து கொண்டிருக்கும்போதே அங்கிருக்கும் ஒரு மசூதியில் எல்லாருக்கும் குடிதண்ணீர் விநியோகம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தேன். உணவுப் பொருட்கள் வாங்க திரண்ட கூட்டத்துக்கு நிகராக குடிதண்ணீருக்கான கூட்டமும் அங்கே இருந்தது. அங்கேயும் சிலரிடம் பேச முயன்றேன். ஆனால் அவர்கள் என்னிடம் பேசுவதற்கு ஒரு நொடி கூட செலவழிக்க விரும்பாமல், தண்ணீர் விநியோகிக்கும் அந்த நண்பர்களை நெருங்கிச் சென்று தண்ணீர் பெறுவதிலேயே மூர்க்கமாக இருந்தனர். நியாயம்தானே.

ஒரு கட்டத்தில் பத்திரிகையாளர் என்பதைக் கடந்து நானும் இடம் விட்டு இடம் ஓடிக் கொண்டிருப்பவள் தானே என்ற அடிப்படையில் மற்றவர்களிடம் பேச முயற்சிப்பதை சற்றே நிறுத்தி என் குடும்பத்துக்கு தண்ணீர் சேகரிப்பதற்காக அந்தக் கூட்டத்தில் முண்டியடித்து தண்ணீர் பெற்றுத் திரும்பினேன்.

இப்படியாக சில மணி நேரங்கள் கழிந்த நிலையில், “என்ன மராம்? வீட்டுக்கு போகலாமா?” என்று கேட்டார் எனது கணவர். எந்தத் தொழிலாக இருந்தாலும் நாம் அனைவரும் சாதாரண மனிதர்கள், நமக்கும் குடும்பம், ஆசாபாசங்கள் இருக்கின்றன என்ற நினைவுகளை அவரது அந்த ஒரு கேள்வி திடீரென எனக்குள் எழுப்பியது.

(16ம் பக்கம் பார்க்க)

# சர்வதேச நாணய நிதியத்தின் ஆளுகை மறுசீரமைப்பு அறிக்கையும் அதன் பரிந்துரைகளும்: சில அவதானிப்புகள்

# ஐஎம்எவ் இன் 16 பரிந்துரைகள் என்ன?



கலாநிதி. இரா.ரமேஷ்
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்)

(நேற்றைய தொடர்ச்சி)

சேமலாப நிதிய பணம் தொடர்பான நம்பிக்கை, பிரஜைகள் மத்தியில் வெகுவாக குறைவடைந்துள்ளது. அதனை மத்திய வங்கி தொடர்பிலும் காண முடியும். ஐஎம்எவ் இன் நிதி உதவியினைப் பெற்றுக்கொள்வதற்கு ஊழியர் சேமலாப நிதி நிதியினை பாதுகாப்பதற்கு அவசியமான பொறிமுறை ஒன்றினை அரசாங்கம் உருவாக்க வேண்டும்.

**அரச வங்கிகளின் சுயாதீனத்தன்மையினை உறுதிசெய்தல்**

வங்கித் துறையிலே மேற்பார்வையை சக்திப்படுத்து வதற்காக சட்டங்களை திருத்த வேண்டும், ஒழுங்கு விதிகள் மற்றும் செயன்முறைகள் மறுசீரமைக்கப்பட வேண் டும் என்பது பதினான்காவது பரிந்துரையாகும். அரச வங்கித் துறையிலே பாரிய ஊழல் மோசடிகள் காணப்படுகின்றன. அரச வங்கித்துறையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களை நியமிப்பதில் பாரிய அரசியல் தலையீடு மற்றும் வெளிப்படைத் தன்மை யின்மை காணப்படுகின்றது. அது ஊழ லுக்கு முக்கிய காரணமாக அமைந்துள் ளது. அரசியல்வாதிகளுக்கு நெருக்கமா னவர்கள் இப்பதவிகளுக்கு நியமிக்கப்ப டுகின்றார்கள். அவர்கள் அரசியல்வாதிக ளின் விருப்பத்திற்கு ஏற்ப தீர்மானம் எடுப்பதும் நடைமுறைப்படுத்துவதும் அரச வங்கிகளின் வீழ்ச்சிக்கும் சீர்குலைவுக்கும் காரண மாக அமைந்துள்ளது. இந்த நிலைமை மாற்றப்பட்டு வங்கிகள் சுயாதீனமாக இயங்குவதற்கான சூழல் உருவாக் கப்பட வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் வலியு றுத்துகின்றது. இன்று அரச வங்கிகளில் பண வைப்பு செய்வதனை மக்கள் தவிர்த்து வருகின்றார்கள். இது அரச வங்கிகள் மீதான மக்களின் அவநம்பிக்கையினைக் காட்டுகின்றது.

**காணிப்பதிவு செயன்முறையினை டிஜிட்டல்மயப்படுத்தல்**

பதிணைந்தாவது பரிந்துரை மிகவும் முக்கியமானதா கும். இலங்கையில் காணிப்பதிவு செயன்முறையில் பாரிய ஊழல் மோசடிகள் இடம்பெறுகின்றன என்பது நாம் அனைவரும் அறிந்த விடயமாகும். மிக முக்கியமாக, காணி தொடர்பான அளவை வரைபடங்கள் ஒரு இடத்திலும், காணி தொடர்பான உரித்துகள் இன்னுமொரு இடத்திலும் பாதுகாக்கப்படுகின்றன. சிலநேரம் காணி தொடர்பான அளவை வரைபடங்கள் தொலைந்து போவ தும் அல்லது உரித்து பத்திரங்கள் தொலைந்து போவ தும், அல்லது வேண்டுமென்று காணாமல் ஆக்கப்படுவ தும் இலங்கையில் நாம் காணும் பொதுவான பிரச்னைகள் ஆகும். ஆகவே, இந்த நிலைமையை சரி செய்வதற் காக காணிப்பதிவு செயன்முறையில் வெளிப்படைத்தன்மையினைக் கொண்டு வருவதற்காக காணிப்பதிவினை டிஜிட்டல் பதிவு முறையின் ஊடாக மேற்கொள்ள வேண் டும் எனவும் அரச காணிகளை பதிவு செய்தல் மற்றும் உரித்து வழங்குதல் தொடர்பாக அடையப்பட்ட முன் னேற்றங்களை பொது மக்கள் பார்க்கக்கூடிய வகையில் ஒரு பிரத்தியேக இணையத்தளத்தில் 2024 டிசம்பர் மாதம் ஆகும் போது பதிவிட வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றது. காணிகளைப் பதிவு செய்வதற்கும், காணி தொடர்பான தகவல்களை பொது மக்கள் மற்றும் வெளி நாட்டு முதலீட்டாளர்கள் பெற்றுக் கொள்வதற்கும் ஒரு பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்படுகிறது. இது மிகவும் முக்கியமானதாகும். வெளி நாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் காணிகளைப் பெற்று வியாபார மற்றும் வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பிக்க முற்படும்போது காணி உரித்துகளைப் பெற் றுக் கொள்வதில் பாரிய அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர். அந்தக் கடினமான செயன்முறையில் இருந்து விடுபடுவதற்காக முதலீட்டாளர்கள் கோடிக்கணக்கான பணத்தை அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் இலஞ்சமாக வழங்கி காணிகளை பதிவு செய்து உரித்துக்களைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். இச்செயன்முறை வெளி நாட்டு முதலீட் டாளர்களை வெறுக்க செய்துவிடுகின்றது. அவர்களின் வர்த்தக ஆர்வத்தை இல்லாமல் செய்து விடுகின்றது. ஆகவே, வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவர்வதற் கும் அவர்களுக்கு காணிகளை இலகுவாக பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற பொறிமுறை ஒன்றினை இலங்கையில் உரு வாக்க இப்பரிந்துரையினை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். ஆகவேதான் காணிப்பதிவு செயற்பா டுகளை **online** மூலமாக டிஜிட்டல் மயப்படுத்துவதற் கான ஆலோசனையை சர்வதேச நாணய நிதியம் வழங்கு கின்றது. காணிப்பதிவு மட்டுமல்ல, ஏனைய அரச சேவை களையும் டிஜிட்டல் மயப்படுத்துவதன் ஊடாக அரச பொது நிறுவனங்களில் பொதுச் சேவைகளை வழங்குவ தில் காணப்படும் ஊழல் மோசடிகளை கணிசமாக குறைக்க முடியும் என்பதனையும் இங்கு குறிப்பிட வேண் டும்.

**நீதிச்சேவை ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மையினைப் உறுதிசெய்தல்**

பதினாறாவதாக இலங்கையின் நீதிச்சேவை ஆணைக் குழுவிற்கு ஒதுக்கப்படுகின்ற வளங்களையும், இருக்கின்ற திறன்களையும் விஸ்தரிப்பதற்கு திட்டம் ஒன்றினை உருவாக்கி அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற பரிந்துரையை முன்வைக்கின்றது. அதனூடாக இவ்வாணைக்குழு தமது கடமை பொறுப்புகளை சுயாதீனமாக மேற்கொள்வதற்கான இயலுமை மற்றும் ஆற்றலை மேம்படுத்த முடியும். அத்துடன், நீத்துறைக் கட்டமைப்பில் அல்லது செயன்முறையில் மாற்றங்களைக் கொண்டுவரவும், நீதித் துறையினை அபிவிருத்தி செய்யவும், நீதித்துறை ஏனைய துறைகள் மீது கண் காணிப்பு, மேற்பார்வை என்பவற்றை சுயாதீனமாக மேற்கொள்வதற்கு இவ்வாணைக்குழு விற்கு போதிய வளங்களும் தகுதி மற்றும் திறமைக்கொண்ட ஆளணியினரும் நியமிக்கப்பட வேண்டும் என்கிறது. இது ஊழல் மோசடிகளைக் கட்டுப்படுத்துவதற்கு அவசியமான ஒன்றாகும். இலங்கையின் நீதிச்சேவை ஆணைக்குழுவின் பலவீனத்தை சர்வதேச நாணய நிதியம் அடை யாளம் கண்டுள்ளது. அந்த பலவீனம் எவ்வாறு சட்டத்தை நடைமுறைப்படுத் துவதில் மற்றும் நிர்வகிப்பதில் தாக்கம் செலுத்துகிறது என்பதை அடையாளம் கண்டுள்ளது. இதன் மூலம் நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் அரசியல் தலையீட்டினை இவ்வறிக்கை வெளிக்காட்டுகின்றது.

**முடிவுரை**

அந்த வகையில் மேற்கூறிய 16 பரிந்துரைகளும் இலங்கைக்கு பெரிதும் அவசியமாகக் காணப்படுகின்றது. இந்நாட்டில் புரையோடி போயிருக்கின்ற ஊழல் மோசடிகளை ஒழித்து வெளிப்படைத்தன்மை கொண்ட, பொறுப்புக்கூறுகின்ற நேர்மைத்திறன் கொண்ட ஆட்சிமுறை கலாச்சாரத்தை உருவாக்குவதற்கு இப்பரிந்துரைகள் பெரிதும் அவசியமாகும். ஆகவே, இப்பரிந்துரைகளை எதிர்ப்பதில் நியாயமில்லை. கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல தற்போதைய நெருக்கடியான சூழலில் இத்தகையதொரு கசப்பானதொரு மாத்திரையை நாங்கள் விரும்பியோ, விரும்பாமலோ உட்கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது. அவை எதிர்காலத்தில் சிறந்த பெறுபேறுகளை இந்நாட்டிற்கு கொண்டுவர உதவும். அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள காலக்கெடு பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். தற்போதைய அரசாங்கம் ஐஎம்எவ் வழங்கியுள்ள கால வரையறைக்குள் இப்பரிந்துரைகளை நிறைவேற்றுமா என்ற வினா எழுகின்றது. இப்பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்கவிற்கு ராஜபக்ஷவின் மொட்டுக் கட்சியினர் எந்தளவுக்கு ஆதரவு வழங்குவார்கள் என்பது பிறிதொரு விடயமாகும். இப்பரிந்துரைகளை அமுல்படுத்துவதனை கிடப்பில் போட்டுவிட்டு அரசாங்கம் தொடர்ந்தும் மனித உரிமைகளையும், ஜனநாயக போராட்டத்திற்கான பிரஜைகளின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் நசுக்கும் சட்டங்களை கொண்டுவருமாக இருந்தால், அது மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும்.

எவ்வாறாயினும், சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளில் காணப்படும் முக்கிய குறைப்பாடுகள் என்னவென்றால், இலங்கையில் ஜனநாயகத்தினையும் மனித உரிமைகளையும் பாதுகாக்க மற்றும் சக்திப்படுத்துவதற்கு அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பாக எந்த பரிந்துரையும் முன்வைக்கப்படாமையாகும். முப்பது ஆண்டுகால சிவில் யுத்தம், யுத்தத்திற்குப் பின்னர் எழுச்சிப்பெற்ற இன மேலாதிக்க சர்வாதிகார அரசாங்கம், தொடர்ச்சியான இராணுவமயமாக்கம் மற்றும் அண்மைக் கால இன மற்றும் மத அடிப்படையிலான வன்முறைகள் போன்றன இலங்கையின் ஜனநாயகத்தினையும் மனித உரிமைகளையும் பெரிதும் அச்சுறுத்தலுக்குட்படுத்தியுள்ளது. ஆகவே, இலங்கையில் ஜனநாயகத்தினையும் மனித உரிமைகளையும் மீட்டெடுக்க வேண்டிய தேவையொன்று காணப்படும் நிலையில், அது தொடர்பாக இவ்வறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பது வருந்ததக்க விடயமாகும். இவ்வறிக்கை முழுக்க முழுக்க ஆளுகை செயன்முறையில் காணப்படும் குறைப்பாடுகள் தொடர்பாக கவனம் செழுத்தியுள்ளது. ஆனால், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் ஆகிய இரண்டும் ஆளுகை செயன்முறையுடன் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டவை - அவை நல்லாட்சிக்கு பெரிதும் அடிப்படையானவை என்பதனை நாம் மனங்கொள்ள வேண்டும்.

பிறிதொரு குறைப்பாடு யாதெனில், தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக மிகவும் பலவீனமான நிலையில் வாழும் சமூக குழுக்களிற்கு அரசாங்கம் என்ன செய்ய வேண்டும், அவர்களின் சமூகப் பாதுகாப்பினை எவ்வாறு உறுதிசெய்ய வேண்டும் என்பது பற்றிய பரிந்துரைகள் தெளிவாக சொல்லப்படாமையாகும். இன்று எழுபது லட்சம் பேர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதாக பொருளாதார நிபுணர்கள் குறிப்பிடுகின்றார்கள். விவசாயிகள், மலையக மக்கள், நாட்கூலித் தொழிலாளர்கள், முறைசாரா துறைகளில் வேலை செய்வோர், பெண் தலைமைத் தாங்கும் குடும்பங்கள் பாரிய வாழ்வாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளதுடன், வாழ்க்கையின் விரக்தி நிலைக்குச் சென்றுள்ளனர். சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது மேற்கூறிய தரப்பினர் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். சமூக பாதுகாப்புத் திட்ட அமுலாக்கத்தில் பல குறைப்பாடுகள் காணப்படுகின்றன. அவை ஆளுகைக் கட்டமைப்புடன் தொடர்புடையவை என்பதனை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும். பொதுச் சேவை வழங்களில் காணப்படும் ஊழல், மோசடிகள், அரசியல் தலையீடு மற்றும் அரசியல் சகாய முறை என்பன உரியவர்களுக்கு அரச சேவைகள் கிடைக்காமைக்கு காரணமாக அமைகிறது. ஆகவே, இது தொடர்பாக இவ்வறிக்கையில் பரிந்துரைகள் முன்வைக்கப்படாமை குறிப்பிடத்தக்கதாகும்.

(முற்றும்)

# இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு மிகக் குறைந்த வரிகளே முக்கிய காரணம்!

## சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 24

உலகிலேயே மிகவும் குறைந்த வரிகளைக் கொண்ட நாடாக இலங்கை காணப்படுவதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இந்த நிலைமையானது கடந்த ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய பங்காற்றியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு வரிகள் மேலும் குறைக்கப்பட்ட போதும், இலங்கையினால் அதனை கையாள முடியாமல் நெருக்கடிக்கு உள்ளாகியதாக சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் முதலாவது மீளாய்வு ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்துரைகையிலே சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட அதிகாரி பீட்டர் ப்ரூயர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன், சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டமானது பொருளாதார நெருக்கடிக்கான மூல காரணங்களை நிவர்த்தி செய்வதுடன் வருமானத்தை அதிகரிப்பதும் முக்கிய அங்கமாகும் என அவர் குறிப்பிட்டார்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12 வீதத்திற்கும் அதிகமான வருமானத்தை பெறுவதே திட்டத்தின் நோக்கங்களில் ஒன்று எனவும், அந்த நோக்கத்தை அடைவதற்கான நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட வேண்டும் எனவும் பீட்டர் ப்ரூயர் வலியுறுத்தினார்.

அத்துடன், விரைவான பணவீக்கம் மற்றும் நிதி வருமானம் மிகக் குறைந்த




மட்டத்தில் இருந்து அதிகரித்து வருவதன் காரணமாக சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் பலனைத்தர ஆரம்பித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஜூன் மாத இறுதியில் திட்டத்தின் செயல்திறன் திருப்திகரமாக இருப்பதுடன், செலவீன மீதிகள் தவிர அனைத்து செயல்திறன் அளவுகோல்களும் பூர்த்தி செய்யப்பட்டதாகவும், வரி வருமானம் தவிர அனைத்து குறிப்பான இலக்குகளும் எட்டப்பட்டதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட அதிகாரி பீட்டர் ப்ரூயர் தெரிவித்துள்ளார். (அ)

# ஆணின் சடலம் மீட்பு!

திருமலை, ஒக். 24

திருகோணமலை-ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஆணொருவரின் சடலமொன்று நேற்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் ஈச்சிலம்பற்று - முத்துச்சேனை பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கே.சதீஸ் (வயது-35) எனவும் தெரியவருகிறது.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு மூன்று பேர் சேர்ந்து மதுபானம் அருந்தியதாகவும்,

மற்றைய இருவரும் வீடுகளுக்குச் சென்றதாகவும் குறித்த நபர் மது அருந்திய இடத்தில் சடலமாக மீட்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

உயிரிழந்தவரின் வலது காதில் இரத்தம் கசிந்து காணப்படுவதாக கூறப்பட்டது.

சம்பவ இடத்துக்கு மூதூர் நீதிமன்ற பதில் நீதவான் எம்.ஏ.சீ.மஹ்ரூப் சென்று பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறும் பொலிஸாருக்கு கட்டளையிட்டார். (அ)

# எங்கிருந்து குண்டு வரும்?...

அந்தப் பக்கம் இருந்து வரும் ஏவுகணை குண்டும், அதற்குள் பதுங்கியிருக்கும் பேரழிவு நெருப்பும் என்னைப் போன்ற பத்திரிகையாளர்கள், மருத்துவ பணியாளர்கள் அல்லது அரசு சாரா ஊழியர்கள் என பேதம் பார்க்குமா என்ன? எல்லாரும் தாக்குதலுக்கு உள்ளாகிறோம்.

**மடிக் கணினியை மூடி வைத்துவிட்டேன்**

இப்படி சுற்றிலும் பதற்றம் நிரம்பிய நிலையில் வீட்டுக்குத் திரும்பினேன். காசாவின் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி இடம்பெயர்ந்து கொண்டிருப்பவர்களின் வலிகளை, சவால்களை பற்றிய எனது கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும்போதுதான், அல் அஹ்லி அரபு மருத்துவமனையில் குண்டுகள் விழுந்து குழந்தைகளும், பெண்களும் கொல்லப்பட்ட இடிச் செய்தி என் இதயத்தைத் தாக்கியது.

ஐய்யோ என்று துடித்தேன். கணவர், குடும்பத்தினர் எல்லாம் பதறியபடி என்னிடம் ஓடிவந்தனர். என்ன என்று கேட்டனர். மருத்துவமனை மீதான தாக்குதலைப் பற்றி கண்ணீர் துளிகளோடு அவர்களிடம் சொன்னேன். அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்திவிட்டது, அந்த கொடூரங்களின் உச்சக் கொடூரம். எங்கள் இதயங்கள் அவநம்பிக்கையால் துடிக்கின்றன. இதற்கு மேல் என்னால் எதுவும் எழுத முடியவில்லை. மடிக்கணியை மூடி வைத்துவிட்டேன்.

**என் குழந்தைகள் தூங்குகிறார்கள்**

நான் பத்திரிகையாளராக தொழில் செய்யலாம். ஆனால் நான் மனுஷிதானே, ஒரு பெண் தானே, குழந்தைகளின் தாயல்லவா?

மேலும் இந்த கடலோரப் பகுதியில் ஏன் இப்படி கண்ணீர் வெள்ளம் கரைபுரண்டு ஓடிக் கொண்டே இருக்கிறது. வாட்டி வதைக்கும் இந்தப் பெரும் வலியை சொல்ல என்னிடம் வார்த்தைகள் நான் அறிந்த மொழிகளில் எதிலும் இல்லை.

கண்ணீரைத் துடைத்துவிட்டு, என் குழந்தைகளை கட்டித் தழுவிக் கொண்டு சாய்ந்தேன். குண்டுச் சத்தத்தின் பின்னால் இருக்கும் 'மரணக் கொள்கை அரசியல்' பற்றி அறிந்திராத அந்த அப்பாவிக் குழந்தைகள் தாயாகிய எனது கதகதப்பில் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய எண்ணங்களோ இதுவரை நான் சென்று வந்த கடை வீதிகளிலும், குண்டு விழுந்த அந்த மருத்துவமனைக்கும் பறந்தன. எங்கிருந்து தூக்கம் வரும்?

நன்றி: அல் ஜசீரா ஊடகம்

தமிழாக்கம் :ஆரா

(கட்டுரையாளர்: மராம் ஹுமெய்ட். ஒரு பாலஸ்தீனிய பத்திரிகையாளர், காசா பகுதியைச் சேர்ந்தவர். அவர் பாலஸ்தீனத்தின் முற்றுகை நிறைந்த வாழ்வியலின் மானுட வலிகளையும், இளைஞர்களின் நம்பிக்கை பற்றியும் தொடர்ந்து எழுதி வருகிறார்) ●




